தமிழால் இணைவோம்

# இந்து தமிழ் திசை

**10-01-2019** பக்கம் எண்: 5

திருவிழா நேரத்தில் திரும்பி பார்ப்பதோடு சரி

## தெப்பக்குளத்தை 'கைவிட்ட' இந்து அறநிலையத்துறை

● நிரந்தரமாக நீர் நிரப்பி படகு சேவை இயக்கப்படுமா?

ஒம். ஆண்டனி செல்வராஜ்



▲ [illegible]

மதுரை

மதுரை வண்டியூர் தெப்பக் குளத்தில் ஆண்டு முழுவதும் நீர் நிரப்பி அழகுபடுத்தாமல், தெப்பத் திருவிழாவுக்கு மட்டும் சம்பிரதாயத்துக்காக அறநிலையத் துறை தண்ணீரை நிரப்புகிறது. நிரந்தரமாக நீர் நிரப்பி படகு சேவையைத் தொடங்க வேண்டும் என பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கின்றனர்.

மதுரையின் அடையாளமான வண்டியூர் மாரியம்மன் கோயில் தெப்பக்குளம் திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. அந்தக் காலத்திலேயே தொலைநோக்குப் பார்வையில் வைகை ஆற்றில் இருந்து இயல்பாகவே தண்ணீர் வரும் வகையில் நீர் வழிப்பாதை அமைக்கப்பட்டிருந்தது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் வரை தெப்பக்குளத்தில் படகு சவாரி இயக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக தண்ணீர் நிரப்ப நடவடிக்கை எடுக்காததால் [illegible] தெப்பக்குளம் [illegible] இருந்து நிறைந்த [illegible]

[illegible]

அதுவும் முழுமையாக நிரப்பாமல் கால் பங்கு உயரத்துக்குத்தான் நிரப்பியுள்ளனர். அதுவே தெப்பக்குளத்தைப் பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது. தெப்பத்திருவிழா முடிந்ததும், தேக்கியுள்ள நீரும் வற்றி மீண்டும் வைதானமாக மாறிவிடும்.

எனவே, தெப்பக்குளத்தின் முழு மட்டத்துக்கு தண்ணீர் நிரப்பி மீண்டும் படகு சவாரியை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் எதிர் பார்க்கின்றனர்.

இதுகுறித்து மாநகராட்சி ஆணையர் அனீஷ் சேகரிடம் கேட்டபோது, "தெப்பக்குளம் இந்து அறநிலையத்துறைக்குச் சொந்தமானது. முன்பு அவர்கள் தான் படகு சேவையைச் செயல்படுத்தினர். அதனால், அந்தத்துறைதான் அதை முடிவு செய்ய வேண்டும்." என்றார்.

இந்து அறநிலையத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "வைகை ஆற்றில் தண்ணீர் வந்தால்மட்டுமே தெப்பக்குளத்தில் தண்ணீர் நிரப்பப்படுகிறது.

மேலும், தெப்பக்குளத்தை மேம்படுத்த போதிய நிதி ஆதாரம் இல்லை. தண்ணீர் வரும்பட்சத்தில் படகு சவாரி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். புதிய திட்டங்களுக்கு நிதி ஆதாரம் கேட்கப்படும்." என்றனர். தெப்பக்குளத்தை பசுமையாக்க என்ன செய்யலாம்



▲ உதவிப் பேராசிரியை அருணா ராமச்சந்திரன்.

என்று மதுரை தியாகராஜர் கல்லூரி தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் அருணா ராமச்சந்திரனிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

மதுரையின் நடுவே இவ்வளவு பெரிய பரப்பில் தெப்பக்குளம் அமைந்திருப்பதே நகருக்குக் கிடைத்த வரம். அடுத்த தலைமுறையினருக்குப் பாதுகாக்க தெப்பக்குளத்தைச் சுற்றிலும் வேம்பு, அரசு, புங்கன், நாவல், பூவரசு, கடம்பு, ஓதியன், ஆல் போன்ற நாட்டு மரங்களை நடலாம்.

இதில், அரசு, நாவல், ஆல் மரங்களின் பழங்களை பறவைகள் விரும்பிச் சாப்பிடும். பறவைகளை அதிகளவு தெப்பக்குளத்துக்கு வர வைக்கலாம்.

அழகுக்காக அல்லி, தாமரை மலர்ச் செடிகளை வளர்க்கலாம். வெட்டிவேர் செடிகள் மூலம் தண்ணீரை மேம்படுத்துவதோடு, மாசு அடையாமல் பார்த்துக் கொள்ளலாம்.

நீர் ஆதாரத்துக்காக வைகை ஆற்றை மட்டுமே நம்பியிருக்காமல், தெப்பக் குளத்தின் நான்குபுறமும் ஒவ்வொரு கி.மீ. தூரமுள்ள பரப்புகளில் இருந்து மழை நீர் இயல்பாகவே தெப்பக்குளத்துக்கு வருவதற்கு மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரையில் தற்போது மால்கள், திரையரங்குகளை விட்டால் பொழுதுபோக்குக்கென ஏதும் இல்லை. தெப்பக்குளத்தைச் சுற்றுலா மையமாக மாற்றினால் நகர மக்களுக்குப் பெரிய வரப் பிரசாதமாக அமையும். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழால் இணைவோம்

# இந்து தமிழ் திசை

**24-01-2019** பக்கம் எண்: 4

# தியாகராசர் கல்லூரியில் நேதாஜி பிறந்த நாள் விழா

மதுரை

மதுரை தெப்பக்குளம் தியாகராசர் கல்லூரியில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 122-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

முதல்வர் டி.பாண்டியராஜா, விடுதலையில் நேதாஜி போஸின் பங்கு பற்றி பேசினார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பற்றிய கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் சிறந்த கட்டுரை எழுதியவர்கள், பேச்சாளர்கள் தேர்வு செய்து பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி என்எஸ்எஸ் திட்ட அலுவலர் உதவிப் பேராசிரியர் அருணா செய்திருந்தார்.

மதசார்பற்ற ஜனதா தளம் சார்பில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

ஜான்சி ராணி பார்க் அருகே நடந்த நிகழ்ச்சிக்கு புறநகர் மாவட்டத் தலைவர் கே.பாக்கியதேவர் தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் ஜான் மோசஸ் நேதாஜி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அகில இந்திய ஜனநாயக சங்கம் சார்பில் காந்தி அருங்காட்சியகத்தில் நேதாஜி பிறந்த நாள் விழா நடைபெற்றது. மாவட்ட உறுப்பினர் செல்வி தலைமை வகித்தார். மாநில செயலாளர் வால்டேர் பேசினார்.



▲ ஜான்சி ராணி பார்க் அருகே நடந்த நேதாஜி பிறந்தநாள் விழாவில் பங்கேற்ற மதசார்பற்ற ஜனதாதள நிர்வாகிகள்.

தினமலர்
DINAMALAR

**31-01-2019** பக்கம் எண்: **4**

## தமிழ்த்திருநாள் விழா

மதுரை தியாகராஜர் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பில் தமிழ்த்திருநாள் விழா துறைத் தலைவர் மலர்விழிமங்கையர்கரசி முன்னிலையில் நடந்தது. பேராசிரியர் தமிழரசன் வரவேற்றார். சுயநிதிபிரிவு இயக்குனர் ராஜசேகரன், முதல்வர் பாண்டியராஜா தலைமை வகித்தனர்.

ஆங்கிலத் துறை தலைவர் சுபத்ராதேவி, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் தர்மராஜ் மற்றும் 14 துறை மாணவர்கள் பங்கேற்றனர். சிலப்பதிகாரம், குண்டலகேசி, சீவகசிந்தாமணி உள்ளிட்ட காவியங்களின் நிகழ்வுகள் தொடர்பாக மாணவர்களின் நாடகங்கள் நடந்தன. பேராசிரியர் முத்தையா நன்றி கூறினார்.

THE NEW INDIAN EXPRESS

**01-02-2019** **Page No : 3**

New Indian Express

# College girls learn self-defense techniques

**Express Features**

At a time when crimes against women are on the rise, it is important for schools and colleges to teach them self-defense. In an attempt to help female students gain confidence to handle any adverse situation, authorities of Thiagarajar College of Arts invited two martial arts female instructors from Chennai to conduct a three-hour programme for the students.

The Physical Education Department of the college took this initiative, and their primary objective is to teach college-going girls that they are capable of defending themselves.

R Selva Kumar, director of Physical Education Department, said, "In this age where women's safety has become a huge question mark, we wanted to make young women understand that they aren't weak. We were looking for female instructors who could teach them techniques to steer away from a threat or attack an attacker. Hence, we brought in MR Deepika and Mahita Suresh from the Chennai Mixed Martial Arts Training Academy to equip the students with a few quick techniques. You don't need to be a trained karate or kung fu professional to learn and practise these techniques."





A three-hour self-defense workshop was held at Thiagarajar College of Arts

Around 150 students and a few female staff members of the college participated in the event. MR Deepika, who held the session, said, "The crime rate against women has gone up in the past decade. Almost every day, we come across news about women being physically attacked. It is important to learn the ways in which such attacks can be evaded or blocked. We have taught them more than 20 simple self-defense techniques. It is common to experience fear and panic during an assault, but you have to try and attack the person opposite to you in sensitive areas like eyes, nose, throat and groin. We also ensured that the session was conducted in a fun and interactive way, rather than plainly demonstrating the moves."

"Many women endure verbal and non-violent sexual harassment. So, we also educated the students on how to face such situations. Conveying a strict 'no' verbally and through your body language is important during such times," she shared.

## 150 students participated

Over 20 simple self-defense techniques were taught to around 150 students and a few female staff members of the college.

**தினமலர்**
**DINAMALAR**

**01-02-2019** பக்கம் எண்: 2

# வெற்றிகரமாக ஏற்றுமதி செய்யலாம் 'ஸ்டார்ட் அப்' நிறுவனம் தொடங்கலாம்

## மதுரையில் பிப். 3 ல் நிகழ்ச்சி

**மதுரை, பிப். 1–**

'வெற்றிகரமாக ஏற்றுமதி செய்வது எப்படி? மற்றும் ஸ்டார்ட் அப் தொடங்குவது எப்படி?' என்ற கருத்தரங்கு மதுரை தெப்பக்குளம் தியாகராஜர் கல்லூரியில் பிப்., 3ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடக்கிறது. பிரபல ஏற்றுமதி பயிற்சியாளர் சேதுராமன் சாத்தப்பன் தமிழில் நடத்துகிறார்.

ஏற்றுமதி மற்றும் 'ஸ்டார்ட் அப்' தொழில்களை பற்றி அறிந்து கொள்வதில், தொழிலதிபர்கள், தொழில்முனைவோர் மற்றும் இளைஞர்களிடம் ஆர்வம் அதிகரித்து வருகிறது. அதை முன்னிட்டு மும்பை இன்டிடியூட் பார் லேர்னிங் எக்ஸ்போர்ட் நிறுவனம், 'வெற்றிகரமாக ஏற்றுமதி செய்வது எப்படி? மற்றும் ஸ்டார்ட் அப் தொடங்குவது எப்படி என்ற கருத்தரங்கை மதுரையில் நடத்துகிறது.

பிப்., 3 காலை 9:30 மணி முதல் மாலை 5:30 மணி வரை, மதுரை தெப்பக்குளம் தியாகராஜர் கல்லூரியில் கருத்தரங்கு நடக்கிறது.

ஏற்றுமதி குறித்தும், அதில் உள்ள இடர்பாடுகள் பற்றியும், அதை களைவது எப்படி? என்று தெரிந்து கொள்ளலாம். தவறில்லாமல் ஏற்றுமதி செய்வது எப்படி? ஏற்றுமதிக்கு மார்க்கெட்டிங் செய்வது எப்படி? ஏற்றுமதியில் எல்.சி., மற்றும் டாக்குமெண்டேஷன் போன்றவற்றை எப்படி கவனத்தில் கொள்வது. 'ஸ்டார்ட் அப்' ஆரம்பிப்பது எப்படி? அரசு மற்றும் தனியார் நிதி பெறுவது எப்படி என்பது பற்றி தினமலர் இதழில் ஸ்டார்ட் அப் தொடர் எழுதிவரும் ஏற்றுமதி பயிற்சியாளர் சேதுராமன் சாத்தப்பன் பேசுவார்.

'ஆர்கானிக் ஏற்றுமதி' குறித்து கோவை வேளாண் பல்கலை ஆர்கானிக் துறை தலைவர் டாக்டர் சோமசுந்தரம் உரையாற்றுவார். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான அரசின் திட்டங்கள், மானியங்கள் குறித்து மதுரையை சேர்ந்த பயிற்றுவிப்பாளர் நடராஜன் பேசுவார். ஏற்றுமதி கடன் உத்தரவாத கழகம் மதுரை கிளையை சேர்ந்த வினோத் ஏற்றுமதிக்கு 'இ.சி.ஜி.சி' தரும் கடன் உத்தரவாதங்களை பற்றி விளக்குவார்.

ஏற்றுமதி மற்றும் ஸ்டார்ட் அப் குறித்த 6 பயிற்சி புத்தகங்கள் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். பயிற்சி கட்டணம் உண்டு. மாணவர்களுக்கு 50 சதவீத சலுகை உண்டு. 98696 16533 என்ற எண்ணில் முன்பதிவு செய்ய வேண்டும். அரங்கத்தில் நேரிலும் கட்டணம் செலுத்தலாம்.

நிகழ்ச்சிக்கான ஊடக உதவியை தினமலர் வழங்குகிறது. கனரா வங்கி, எக்ஸ்போர்ட் கிரடிட் கியாரண்டி கார்ப்பரேஷன் ஆகியவை இணைந்து வழங்குகின்றன.

**THE HINDU**

**04-02-2019** **Page No : 4**

## Workshop on stress management

Thiagarajar College organised a workshop on stress management for the non-teaching staff on January 30. Dr. P Tharmaraj, Dean (R&D) welcomed the gathering. Resource person V. A. Appavu Samraj, former Joint Director of Industrial Safety and Health, explained the causes of occupational stress and method of maintaining harmonious balance between family and official commitment. Principal Dr. D. Pandiaraja presided. Dr. T. Rajasekar, Director (Self-Finance course), explained the theme of the workshop. On January 29, the college organised a self-defence class for women in which a large number of students and faculty members participated. M R. Deepika and Mahita Suresh, women instructors, demonstrated various techniques. Dr. Kalaivani, Assistant Professor of English, proposed a vote of thanks.

# தினமலர்
# DINAMALAR

**04-02-2019** பக்கம் எண்: **2**



மதுரையில் ஏற்றுமதி செய்வது குறித்த கருத்தரங்கில் ஏற்றுமதி பயிற்சியாளர் சேதுராமன் சாத்தப்பன் பேசினார்.

## ஏற்றுமதி நிறுவனம் துவக்குவது எளிது

### சொல்கிறார் சேதுராமன் சாத்தப்பன்

மதுரை, பிப். 4–

"ஏற்றுமதி நிறுவனம் துவக்குவது எளிது. போலி ஏற்றுமதி ஆர்டர்கள் கிடைப்பது மிகவும் எளிது. இதனால் பாடுபட்டு சம்பாதித்த பணம் காணாமல் போய் விடும். எனவே ஏற்றுமதி தவறில்லாமல் இருக்கும்படி பார்த்து கொள்ள வேண்டும்," என மதுரை தியாகராஜர் கல்லூரியில் வெற்றிகரமான ஏற்றுமதி செய்வது குறித்த கருத்தரங்கில் பிரபல ஏற்றுமதி பயிற்சியாளர் சேதுராமன் சாத்தப்பன் கூறினார்.

பார்வையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து சேதுராமன் சாத்தப்பன் பேசியதாவது:

மாநிலத்தில் ஆயிரம் கி.மீ., தூரத்திற்கு கடற்கரை உள்ளது. தமிழர்கள் பண்டைய காலத்தில் தாங்கள் வாழ்ந்த பகுதியை ஐந்து பிரிவுகளாக பிரித்திருந்தனர். அதில் கடலும், கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் எனப்பட்டது. தமிழர்கள் கடலோடிகள். அதனால் தான் கடல் காற்றையும், அலையையும், நீரோட்டத்தையும் பருவ காலங்களை பற்றியும், நட்சத்திர மண்டலங்களை பற்றியும் அறிந்திருந்தார்கள்.

இதனால் பயமின்றி பல தரப்பட்ட படகுகளில் பொருட்களை ஏற்றிக் கொண்டு மேற்கத்திய நாடுகளுக்கும், தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சென்று விற்றார்கள். அங்கே கிடைத்த பொருட்களை வாங்கி வந்தார்கள். இது கி.மு., முதல் நூற்றாண்டில் நடந்தவை.

ஏற்றுமதியை புதையலாக சிலர் கருதுகின்றனர். ஏற்றுமதியும் ஒரு தொழில் தான். ஒரு பெட்டிக்கடை வைத்தால்கூட அதை எப்படி பாதுகாப்போமோ அப்படி பாதுகாக்க வேண்டும். அப்போது தான் வளரும்.

உள்நாட்டிலேயே சரக்குகளை விற்று பணம் பார்ப்பதற்குள் போதும் போதுமென்றாகி விடுகிறது. இதில் வெளிநாட்டு வியாபாரமா என ஏக்கப்பெருமூச்சு விடலாம். ஏற்றுமதி என்றால் பொருட்களை மட்டும் அனுப்புவது அல்ல.

அப்பொருட்களை அனுப்புவதன் மூலம் நாட்டின் மானம், மரியாதை, கவுரவம் ஆகியவற்றையும் ஏற்றுமதி செய்கிறீர்கள்.

நியாயமான லாபம், சரியான விலை, நல்ல சரக்குகள், நேரம் தவறாமை என்பவை ஏற்றுமதியாளரின் கண்களாக இருக்க வேண்டும் என்றார். இவரது தொடர்புக்கு sethuraman.sathappan@gmail.com, அலைபேசி 98204 51259.

கல்லூரி முதல்வர் பாண்டியராஜா, கனரா வங்கி துணை பொது மேலாளர்கள் மாதவராஜ், மகேந்திரன், அப்பளம் தயாரிப்பாளர்கள் விற்பனையாளர்கள் சங்க மாநில தலைவர் திருமுருகன் மற்றும் பலர் பேசினர்.

நிகழ்ச்சிக்கான ஊடக உதவியை தினமலர் வழங்கியது. கனரா வங்கி, எக்ஸ்போர்ட் இரடி பொரண்டி கார்ப்பரேஷன், பாண்டியன் அப்பளம் நிறுவனம் இணைந்து வழங்கின.

தினமணி
www.dinamani.com

12-02-2019 பக்கம் எண்: 3

# குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற மதுரை மாணவர்களுக்குப் பாராட்டு

மதுரை, பிப். 11: புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழா அணிவகுப்பில் பங்கேற்ற மதுரை என்சிசி மாணவர்கள் திங்கள்கிழமை பாராட்டப்பட்டனர்.

அமெரிக்கன் கல்லூரி 2-ஆம் ஆண்டு வணிகவியல் மாணவர் அகஸ்டின் ஜெயக்குமார், தியாகராஜர் கல்லூரி கணிதவியல் துறை 2-ஆம் ஆண்டு மாணவர் டேனியல் ரோஷன் ஆகியோர் குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்றனர். இவர்கள் என்சிசி மதுரை கடற்படை பிரிவில் பயிற்சி பெற்றவர்கள்.



குடியரசு தின அணிவகுப்பில் பதக்கம் வென்ற மதுரை என்சிசி கடற்படை பிரிவு மாணவர்களுடன் கமாண்டிங் அதிகாரி வி.பி.செந்தில்.

தமிழ்நாடு-புதுச்சேரி மற்றும் அந்தமான் நிகோபர் என்சிசி அணி சார்பில் இவர்கள் இருவர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதேபோல, அமெரிக்கன் கல்லூரி இயற்பியல் துறை 2-ஆம் ஆண்டு மாணவரான லோகேஷ்வர், குடியரசு தினத்தையொட்டி தில்லியின் என்சிசி மாணவர்களுக்கான போட்டிகளில் பங்கேற்றார்.

அதில் போர்க்கப்பல் செய்யும் போட்டியில் தங்கப் பதக்கமும், பாய்மரக் கப்பல் தயாரிப்புப் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்றார்.

தில்லியில் இருந்து மதுரை திரும்பிய இந்த 3 மாணவர்களுக்கும் மதுரை என்சிசி குரூப் சார்பில் திங்கள்கிழமை வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது, கடற்படை என்சிசி கமாண்டிங் அதிகாரி வி.பி.செந்தில் 3 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்தினார்.

DINAMALAR

**13-02-2019** பக்கம் எண்: 3



மதுரை தியாகராஜர் கல்லூரி கருத்தரங்கில் திருச்சி பாரதிதாசன் பல்கலை பேராசிரியர் லட்சுமணன் பேசினார். வலமிருந்து கல்லூரி முதல்வர் பாண்டியராஜா, செயலாளர் ஹரிதியாகராஜன், தலைவர் கருமுத்து கண்ணன், அயர்லாந்து தேசிய பல்கலை பேராசிரியர் பெட்ரீ பிரோயின், கல்லூரி இணை பேராசிரியர் சீனிவாசன்.

THE HINDU

**13-02-2019** Page No : 2

# International conference inaugurated

STAFF REPORTER
MADURAI

A two-day international conference on 'Recent trends in mathematical and physical modelling and bioresource management strategies' was inaugurated at Thiagarajar College of Arts and Science here Tuesday.

The departments of Physics, Mathematics and Zoology jointly organised the programme, which mainly aims at exposing students to multidisciplinary research and work on conservation of bioresources.

College president Karumuttu T. Kannan elaborated on the need to establish intellectual property and the importance of obtaining patents. He said by possessing intellectual property, one could claim ownership and earn more. Narrating the return of Mahatma Gandhi to India from South Africa, he said a spark (in this case 'Purna Swaraj') was necessary to carry a single idea forward. College secretary Hari K. Thiagarajan and Principal D. Pandiaraja were also present.

Most of the discussion was dominated by talks on nonlinearity by M. Lakshmanan, Professor of Eminence, Bharathidasan University, Tiruchi, in the first technical session .

In the next session, Petri T. Piiroinen, Professor, School of Mathematics, Statistics and Applied Mathematics, University of Ireland, Galway, spoke about relating population dynamics to nonlinearity.

R.V. Krishnakumar, Associate Professor of Physics, Thiagarajar College, chaired the two sessions. S. Karuthapandian, Professor and Head, Department of Biotechnology, Alagappa University, spoke on 'Marine microbial resources'.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

13-02-2019 பக்கம் எண்: 3



மதுரை தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் பேசினார் கல்லூரித் தலைவர் கருமுத்து தி. கண்ணன்.

# தியாகராசர் கல்லூரியில் சர்வதேச மாநாடு

மதுரை

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் மதுரை தெப்பக்குளம் தியாகராசர் கல்லூரியில் 2 நாள் சர்வதேச மாநாடு நேற்று தொடங்கியது.

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு தன்னாட்சி நிதியில் 'கணித இயற்பியல் மாதிரியாக்கம், உயிர் வளங்கள் மேலாண்மைத் திட்டமுறைகளில் உள்ள தற்கால நடைமுறைகள்' என்ற தலைப்பில் நடைபெறும் மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா வரவேற்றார். கல்லூரித் தலைவர் கருமுத்து தி. கண்ணன் தலைமை உரையில், சிறிய பொறியே பெரிய கண்டுபிடிப்பை உருவாக்கும். மகாத்மா காந்தி, அப்துல்கலாம் ஆகியோரின் வாழ்வியல் நிகழ்வுகளில் இருந்து மாணவர்கள் பாடம் கற்க வேண்டும். ஆராய்ச்சி மாணவர்கள் மேற்கொள்ளும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறும்போது, அது அதிக முக்கியத்துவம் பெறும் என்றார்.

இதைத்தொடர்ந்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேராசிரியர் மு. லட்சுமணன் சிறப்புரையாற்றினார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிர் தொழில்நுட்பவியல் பேராசிரியர் கருத்தப்பாண்டியன் பேசினார்.

அயர்லாந்து நாட்டு தேசிய பல்கலைக்கழக கணிதவியல் பேராசிரியர் பெட்ரி பிரோனியன் உள்ளிட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். உயிர் வளங்களைப் பாதுகாத்தல், பல்துறைகளில் ஆய்வுத்திறனை ஊக்குவித்தல் ஆகிய நோக்கத்துடன் இம்மாநாடு நடக்கிறது.

இந்நிலை, முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளை மாநாட்டில் சமர்ப்பித்தனர். கல்லூரிச் செயலர் ஹரி தியாகராஜன் உட்பட பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

தியாகராசர் கல்லூரி இயற்பியல் துறை இணை பேராசிரியர் ந. சீனிவாசன் நன்றி கூறினார்.

பல்வேறு அமர்வுகளாக, இந்த மாநாடு இன்றும் நடைபெறுகிறது.

தினமணி
www.dinamani.com

14-02-2019 பக்கம் எண்: 2

# மதுரை தியாகராஜர் கல்லூரியில் சர்வதேச மாநாடு

மதுரை, பிப். 13: மதுரை தியாகராஜர் கல்லூரியில், மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் மற்றும் பல்கலைக் கழக நிதி நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் சர்வதேச அளவிலான இரு நாள் மாநாடு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இயற்பியல் மாதிரியாக்கம் மற்றும் உயிர்வளங்களின் மேலாண்மை திட்டமுறைகளில் உள்ள தற்கால நடைமுறைகள் என்னும் தலைப்பில் மாநாடு நடைபெற்றது. இதில் கல்லூரித் தலைவர் கருமுத்து தி. கண்ணன் தலைமை உரையில், காந்தி, அப்துல் கலாம் ஆகியோரின் வாழ்வியல் நிகழ்வுகளில் இருந்து மேற்கோள் காட்டி, ஒரு சிறு பொறியே பெரிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் என்றார். மேலும் கண்டுபிடிப்புகளுக்குக் காப்புரிமை பெறுவதின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக, பட்நாகர் விருது பெற்ற பாரதிதாசன் பல்கலைக் கழக பேராசிரியர் மு.லக்ஷ்மணன் மாநாட்டு பேருரையாற்றினார். அயர்லாந்து நாட்டு தேசிய பல்கலைக் கழக கணிதவியல் பேராசிரியர் பெட்ரி பிரோவியன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

கணிதவியல், இயற்பியல் மற்றும் விலங்கியல் துறை சார்பாக ஒருங்கிணைக்கப்பட்ட இந்த மாநாடு உயிர் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பல்துறைகளில் ஆய்வுத்திறனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்பவியல் பேராசிரியர் கருத்தப் பாண்டியன் உயிர் வளங்களின் மேலாண்மை என்ற தலைப்பில் பேசினார். இளநிலை ஆய்வு மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். முன்னதாக கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா வரவேற்றார். முடிவில் இணைப் பேராசிரியர் என்.சீனிவாசன் நன்றி கூறினார்.

THE NEW INDIAN EXPRESS

# Thiagarajar College hosts 2-day international conference

**Organisers**

The event was organised by Ministry of Human Resource Development (MHRD) and University Grants Commission (UGC) along with college departments

EXPRESS NEWS SERVICE
@ Madurai

THIAGARAJAR College hosted a two-day international conference on 'Recent Trends in Mathematical and Physical Modeling and Bio-resource Management Strategies'. The event was organised by Ministry of Human Resource Development (MHRD) and University Grants Commission (UGC) along with the departments of Physics, Mathematics and Zoology.

Principal of the college D Pandiaraja, in his address, highlighted the achievements of the college. President Karumuttu T Kannan stressed on the importance of obtaining patents and the need for Intellectual Property Rights(IPR).

Professor M Lakshmanan from Bharathidasan University, Trichy, in his address as the chief guest, spoke on emerging science.

Professor at School of Mathematics, University of Ireland, Galway Petri Puroinen and other experts participated in the event.

THE NEW INDIAN EXPRESS

P-No. 5 Date: 13.02.19



## International conference

A two-day international conference on recent trends in mathematical and physical modeling, and bio-resource and management strategy was held at Thiagarajar College recently. The event was presided over by Karumuttu T Kannan, president of the college, and principal D Pandiaraja.

தினமலர்
DINAMALAR

**25-02-2019** பக்கம் எண்: 3



■ மதுரை தியாகராஜர் கல்லூரியில் சொர்ணலட்சுமி குழுவினரின் 'ஆயிரத்தில் ஒருவன்' இசை நாட்டிய நாடகம் நடந்தது.

தினமணி
www.dinamani.com

25-02-2019 பக்கம் எண்: 2

# திருக்குறளில் இசை, நடனம், நாடகம்

**மதுரை, பிப். 24:** மதுரை தியாகராஜர் கல்லூரியில் திருக்குறளைக் கொண்டு இசை, நடன, நாடக நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அருள் ஞான சபை சார்பில் குறள் அமுது ஆயிரத்தில் ஒருவன் என்ற தலைப்பில் இசை, நடன, நாடக நிகழ்ச்சி மதுரை தெப்பக்குளத்தில் உள்ள தியாகராஜர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி எம்.ராஜாராம், இசை மேதைகள் பற்றி எழுதிய மியூசிக்கல் ஜீனியஸ் என்ற புத்தகத்தை அரவிந்தன் மருத்துவமனையின் நிர்வாகி சீனிவாசன் வெளியிட தியாகராஜர் மில்ஸ் செயல் இயக்குநர் ஹரி தியாகராஜன் பெற்றுக்கொண்டு பேசியது:

திருக்குறளை, திருவள்ளுவரை' பற்றி சொல்ல வேண்டுமானால் ஒரு நாள், ஒரு மாதம், ஏன் ஒரு ஆண்டு கூட போதாது. உலக பொது மறை என திருக்குறளை குறிப்பிடுவதற்கு காரணம் எந்த மதக் கடவுளையும் குறிப்பிடாமல் பொதுவாக கடவுள் என்றே குறள்களில் குறிப்பிடப்பட்டிருக்கும். அதே போன்று, ஒவ்வொருவரும் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஒன்றே முக்கால் அடியில் மிக பெரிய கருத்துக்களாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஒரு நிகழ்ச்சியில் மாணவி ஒருவர் 1330 குறள்களையும் கூறுவது பிரமிப்பை ஏற்படுத்தியது. நம் நாட்டு மாணவர்களும் 1330 குறள்களை கூறுவதற்கு முயற்சிக்க வேண்டும். திருக்குறளை பின்பற்றினால் வாழ்க்கையில் பல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். 'கற்க கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக' என்ற குறளில் துணைக் கால் கிடையாது. இந்த குறளின் தாக்கம் என்னவென்றால் கல்வியை கற்றவனுக்கு யார் துணையும் தேவையில்லை என்பதுதான்.

திருக்குறளை, இசை, நடனம், நாடகம் மூலம் எளிமையாக அனைவரிடமும் கொண்டுச் சேர்க்க முடியும். அந்த வகையில் மதுரை மாநகரத்தில் முதல் முறையாக இந்த நிகழ்ச்சி தியாகராஜர் கல்லூரியில் நடைபெறுவது மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார்.

தொடர்ந்து, திருக்குறளை மையமாக கொண்டு உருவாக்கிய 'ஆயிரத்தில் ஒருவன் என்ற இசை, நடன, நாடக நிகழ்ச்சியை சென்னை சேர்ந்த சொர்ண லட்சுமி குழுவினர் நடத்தினர். நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

25-02-2019 பக்கம் எண்: 3

# திருக்குறளை நாட்டிய நாடக வடிவில் வழங்கினால் இளைஞர்களை பெரிதும் கவரும்

● தியாகராசர் கல்லூரி செயலர் கருத்து

■ மதுரை

திருக்குறளின் கருத்துகளை நாட்டிய நாடக வடிவில் கொண்டு செல்லும்போது, அது இளைஞர்களைப் பெரிதும் கவரும் என தியாகராசர் கல்லூரிச் செயலர் ஹரி தியாகராசன் தெரிவித்தார்.

அருள் ஞான சபையும், பாரதி கலாச்சார மையமும் இணைந்து 'ஆயிரத்தில் ஒருவன்' என்ற நாட்டிய நாடகத்தை மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் நடத்தின. முன்னதாக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ராஜாராம் எழுதிய 'மியூசிக்கல் ஜீனியஸ்' என்ற நூலை அரவிந்த் கண் மருத்துவமனை நிர்வாகி சீனிவாசன் வெளியிட்டார். கல்லூரிச் செயலர் க. ஹரி தியாகராசன் பெற்றுக் கொண்டார். விழாவில் ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி எம்.ராஜாராம் பேசியது:



▲ மதுரை தியாகராசர் கல்லூரியில் 'ஆயிரத்தில் ஒருவன்' என்ற நாட்டிய நாடக விழாவையொட்டி, ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி ராஜாராம் எழுதிய நூலை அரவிந்த் கண் மருத்துவமனை நிர்வாகி சீனிவாசன் வெளியிட, பெற்றுக் கொண்டார் கல்லூரி செயலர் ஹரி தியாகராசன்.

ஐந்தாயிரம் ஆண்டுக்கு முற்பட்டது தமிழ் மொழி. ஆனால், 700 ஆண்டுக்கு முந்திய ஆங்கிலம் நம்மை ஆட்சி செய்கிறது. தமிழில் சிறந்த நூல் திருக்குறள். இதன் மேன்மையை மேலும் பரப்பும் வகையில், இந்த இசை நாட்டிய நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சொர்ண லட்சுமி குழுவினர் நிகழ்த்தும் இந்நாட்டிய நாடகம் மதுரையில் இது 10-வது நிகழ்ச்சியாகும். 'மறப்போம், மன்னிப்போம்' என்ற கருத்துகளை உள்ளடக்கிய வகையில் இதில் 52 திருக்குறள்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்குறள்களின் அடிப்படையிலேயே இந்த நாட்டிய நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளது, என்றார்.

கல்லூரிச் செயலர் க.ஹரி தியாகராசன் பேசும்போது, ஐஏஎஸ் அதிகாரிகள் பணி ஓய்வுக்குப் பிறகு தொழில் சார்ந்த விஷயங்களில் மட்டும் கவனம் செலுத்துவர்.

ஆனால் தமிழ், இலக்கியத்திற்கென தனது ஓய்வுக்காலத்தை ராஜாராம் செலவிடுவது பெருமை. நாட்டிய நாடக வடிவில் திருக்குறளைக் கொண்டு செல்லும்போது, இன்றைய இளைஞர்களை அது பெரிதும் கவரும்" என்றார். விழாவில் பேராசிரியர்கள், மாணவர்கள், அருள் ஞானசபை உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**தினமலர்**
**DINAMALAR**

**28-02-2019** பக்கம் எண்: 2

# கல்லூரியில் சர்வதேச கருத்தரங்கு

திருப்பரங்குன்றம், பிப். 28– மதுரை சவுராஷ்டிரா கல்லூரி ஆங்கிலத்துறை சார்பில் மொழி மற்றும் இலக்கியத்தில் புதிய வழிகளும், நடைமுறைகளும் என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு நடந்தது.

முதல்வர் ராமலிங்கம் தலைமை வகித்தார். துறைத் தலைவர் ரஷிலா முன்னிலை வகித்தார். பேராசிரியர் கவிதா வரவேற்றார்.

சிங்கப்பூர் நயாங் தேசிய தொழில்நுட்ப அகாடமி பல்கலை பேராசிரியர் அனிதா தேவிப்பிள்ளை பேசினார்.

பின்பு நடந்த தொழில்நுட்ப அமர்வில் மதுரை காமராஜ் பல்கலை பேராசிரியர் பெரேரியா, அமெரிக்கன் கல்லூரி ஆங்கிலத்துறை தலைவர் ஜான்சேகர், தியாகராஜர் கல்லூரி பேராசிரியர் கவிதா, சரஸ்வதி நாராயணன் கல்லூரி பேராசிரியர் உமா, நெல்லை அண்ணா பல்கலை பேராசிரியர் ஜெயந்தி பேசினர். பேராசிரியர் சிவக்குமார் நன்றி கூறினார்.

**THE NEW INDIAN EXPRESS**

**01-03-2019** **Page No : 7**

DANCE-DRAMA

# KURALS CURATED ON CENTRESTAGE

Keerthana M Sundaram

The 1,330 couplets of Thriuvalluvar's *Thirukkural* took a different form on Sunday evening at the Thiagarajar College. With the efforts of retired civil servant M Rajaram and the Bharath Cultural Centre, a few couplets were presented as a musical dance drama.

The event kick-started with the launch of M Rajaram's *Musical Geniuses*, which speaks of the life of 27 different musical legends from Tamil Nadu. Rajaram said, "During my tenure as a district collector at Thanjavur, I learnt lot about Tamil Nadu's rich musical and cultural heritage. This book is a dedication to those legends."



The event was held on Sunday at Thiagarajar College

Hari K Thiagarajan, secretary of the college, said, "While most civil servants are busy with their official responsibilities, a few, like Rajaram sir, find the interest and time to focus on things relating to art and culture. There is no doubt that *Thirukkural* breaks societal barriers like religion and is a globally accepted piece of literature. The book literally talks about every aspect of life — there is no other book that it can be compared to. I am glad that he has taken the initiative to bring out significant aspects of the work in the form of a dance drama."

The dance drama, titled *Aayirathil Oruvan*, was a 90-minute performance which showcases various aspects of the *Thirukkural* focused on friendship, love, devotion to god, parenthood and moral values. Scripted by Rajaram with the help of KR Swarnalakshmi, a popular choreographer from Chennai who initiated the Bharath Culture Centre, the drama was first performed in Chennai in January 2018 and has been performed across India and abroad. On Sunday, it was performed for the first time in Madurai, organised in unison with Arul Gnana Sabai.

More than 50 *kurals* were performed as rhythmic narrations. The colourful visual stage design added to the classical and folk dances by performers on stage.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

02-03-2019 பக்கம் எண்: 4

# தியாகராசர் கல்லூரியில் விளையாட்டு விழா

02-03-19
Pg: 04

■ மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் கணிதம், வணிகவியல் துறை மாணவ, மாணவிகள் வெற்றிபெற்றனர்.

தியாகராசர் கல்லூரியில் 70-வது ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. கல்லூரிச் செயலர் க. ஹரிதியாகராசன் போட்டிகளைத் தொடங்கினார். உடற்கல்வித்துறை இயக்குநர் செல்வக்குமார் வரவேற்றார். வீரர்களின் அணிவகுப்பு நடந்தது.

யோகா, சிலம்பாட்டம், விரைவு ஓட்டம், நாட்டுப்புறக் கலை உட்பட பல்வேறு போட்டிகள் நடந்தன. ஆண்களுக்கான ஒட்டுமொத்தப் போட்டிகளில் வணிகவியல் மாணவர்களும், மகளிர் போட்டிகளில் கணிதத்துறை மாணவிகளும் வென்றனர். கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா, சுயநிதிப் பிரிவு இயக்குநர் த. ராஜசேகர், உடற்கல்வித் துறை துணை இயக்குநர் பி.ராஜா ஆகியோர் விருது, பரிசுகளை வழங்கினர். பி.நதியா நன்றி கூறினார்.

THE HINDU

02-03-2019 Page No : 1

# Life lessons from the *Thirukural*

*Aayirathil Oruvan* was as much about music, dance and acting as it was about the message on the art of living

SOMA BASU



**Speaking of values** Conveying the essence of Thirukural • K ASHOK

The last scene of the dance drama *Aayirathil Oruvan* was spectacular. The storyline – about two lovers pining for each other, their separation and reunion culminating into marriage – was predictable. But what gripped the audience was the lucid interpretation of *Thirukural* couplets in a language that everybody could understand. The team combined contemporary music with traditional folk forms and enlivened the atmosphere with colours and vibrancy.

The final wedding scene had *poikkal kuthirai aattam, oyilattam, thapattam* and *karagattam* performances. And the audience loved it. The 90-minute show sailed through, reverberating with the energy of the performers and the richness of the text.

Held at the Thiagarajar College of Arts, the event also marked the release of the book *Musical Geniuses* penned by retired bureaucrat, Dr M Rajaram. Having translated the *Thirukural* in English (as *Pearls of Inspiration*), the dance drama was his idea of taking Tamil classic of 1,330 [illegible]



[illegible] itude," he says. It took him almost two years to write a suitable script. For easy engagement with audiences across age groups, he settled for a simple love story. And then it was converted into an entertaining musical drama matching the scenes, elements, characters and situations with the relevant couplet.

Choreographer and Bharatanatyam dancer K R Swarnalakshmi took it as a challenge to present it in a format that would appeal to audiences of all ages. "My endeavour was to present the rich culture of our State," she says. And she did so [illegible]

[illegible] var's writings. It was the troupe's 11th show in last one year . The performance has travelled to Taiwan too and will also be performing in Singapore, Dubai and Chicago later this year, she informs us.

'Forget and forgive' is central to the theme of *Aayirathil Oruvan* (One in a Million). Through 62 selected couplets that are relevant to the story line, it brings to the fore the importance of the birth of a child, good parenting, friendship and kinship, virtue and valour, charity and welfare. Each quality and virtue was showcased through [illegible]

[illegible] when life was simple and pure and not overtaken by technology and strife.

Using brisk footwork, the *hasta mudras* and the articulate expressions of Bharatanatyam, several traditional aspects that define heritage were also included. The marketplaces of yesteryears, the joy of playing *pallanguzhi, pandi attam, poshampa, kabaddi*, the happiness of eating home made food and several such aspects were integrated with poetic rhythm.

"The world today is losing sight of many traditions of the past. Through this simple dance drama, we hope people understand the relevance of leading a meaningful life," says Rajaram.

The universal appeal of a young warrior, the hero, who leads an adventurous childhood and finds love in the minister's daughter but the king explains to him how and why duty comes first and the importance of education to be independent – each part of the story shone with the relevant couplet from the *Thirukural*. "The work, if read and understood, provides solutions to many issues in our daily lives," says Rajaram.



தினமணி
www.dinamani.com

03-03-2019 பக்கம் எண்: 4

# தியாகராஜர் கல்லூரியில் விளையாட்டு விழா

**மதுரை, மார்ச் 2:** மதுரை தியாகராஜர் கல்லூரி விளையாட்டு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விழாவை கல்லூரிச்செயலர் கருமுத்து க.தியாகராஜன் தொடக்கி வைத்தார். மேலும் கல்லூரி மைதானத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து,

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். இதைத்தொடர்ந்து நடைபெற்ற விழாவில் மாணவர்கள் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தி அணிவகுத்துச் சென்றனர். மேலும் யோகா நிகழ்ச்சிகள், சிலம்பாட்டம், விரைவு ஓட்டம், நாட்டுப்புறக் கலைகள் உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் ஆண்களுக்கான ஒட்டுமொத்த விருதை வணிகவியல் துறை மாணவர்களும், பெண்களுக்கான விருதை கணிதவியல் மாணவிகளும் பெற்றனர்.

கல்லூரி முதல்வர் பாண்டியராஜா, சுயநிதிப்பிரிவு இயக்குநர் த.ராஜசேகர் ஆகியோர் மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கினர். விழாவில் உடற்கல்வித் துறை இயக்குநர் செல்வக்குமார் வரவேற்றார். துணை உடற்கல்வித்துறை இயக்குநர் நதியா நன்றி தெரிவித்தார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**03-03-2019** பக்கம் எண்: **3**





▲ ஹரிதியாகராசன் ▲ சந்திரமோகன்

## இந்திய தொழில் கூட்டமைப்புக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு

Pg:03

■ மதுரை

மதுரை இந்திய தொழில் கூட்டமைப்பின் 2019-20-க்கான மாநில புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. இதில், டாஃபே மோட்டார் நிறுவன இயக்குநர் எஸ். சந்திரமோகன் தலைவராகவும், தியாகராசர் கல்லூரிச் செயலர் க. ஹரி தியாகராசன் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இந்திய தொழில் கூட்டமைப்பின் நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

THE HINDU

04-03-2019 Page No : 2



Bharat Vidya Mandir Matriculation School celebrated Annual Day recently; Annual Day was celebrated in S E V Matriculation Higher Secondary School on February 23; and Thiagarajar College conducted Sports Day •

## Yoga by students

Thiagarajar College conducted Sports Day on March 1. The students performed yoga in individual and groups and a visually challenged student's performance drew applause from the audience. Department of Commerce won the overall winners trophy. Mathematics department bagged the overall shield for women. English department was adjudged runner up for both men and women.

தினமணி
www.dinamani.com

07-03-2019 பக்கம் எண்: 2

# 'கல்விக்கு ஒருபோதும் அழிவில்லை'



மதுரை தியாகராஜர் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற ஆண்டு விழாவில் மாணவிக்கு பரிசு வழங்கிய மதுரை காமராஜர் பல்கலை. துணைவேந்தர் எம்.கிருஷ்ணன். உடன் (இடமிருந்து), கல்லூரித் தலைவர் கருமுத்து தி.கண்ணன், கல்லூரிச் செயலர் கருமுத்து க.தியாகராஜன் உள்ளிட்டோர்.

**மதுரை, மார்ச் 6:** மனித வாழ்க்கைக்கு அழிவு உண்டு, ஆனால் கற்கும் கல்விக்கு ஒருபோதும் அழிவில்லை என மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.கிருஷ்ணன் பேசினார்.

மதுரை தியாகராஜர் கல்லூரியில் 70-ஆம் ஆண்டு கல்லூரி நாள் விழா புதன்கிழமை நடைபெற்றது. விழாவில், கல்லூரி முதல்வர் து.பாண்டியராஜா ஆண்டறிக்கை வாசித்தார்.

கல்லூரி தலைவர் கருமுத்து தி. கண்ணன் தலைமை வகித்தார். விழாவில் கல்லூரியின் முன்னாள் மாணவரும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருமான எம்.கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசியதாவது:

தியாகராஜர் கல்லூரி தமிழ் வளர்க்கும் பெருமை படைத்தது. பல்கலைக்கழக மானியக்குழுவின் சார்பில் வழங்கப்படும் ஆராய்ச்சி உதவித் தொகை ரூ.400-ஆக இருந்த காலகட்டத்தில், தியாகராஜர் கல்லூரியின் அறக்கட்டளை சார்பில் ஆராய்ச்சி உதவித்தொகையாக ரூ.300 வழங்கப்பட்டது. மனித வாழ்க்கைக்கு அழிவுண்டு. ஆனால், நாம் கற்ற கல்விக்கு அழிவில்லை. எனவே, மாணவர்கள் ஒவ்வொரு நாளும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். மேல்நிலைக் கல்வியோடு திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

விழாவில், தேசிய மாணவர் படை மற்றும் விளையாட்டுத் துறையில் சாதனைப் புரிந்த மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். முன்னதாக கல்லூரிச் செயலர் கருமுத்து க.தியாகராஜன் வரவேற்றார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

07-03-2019 பக்கம் எண்: 3

# தியாகராசர் கலைக் கல்லூரி தின விழா

■ மதுரை

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் 70-வது கல்லூரி நாள் விழா நடைபெற்றது.

கல்லூரிச் செயலாளர் ஹரி தியாகராசன் வரவேற்றார். கல்லூரித் தலைவர் தி.கண்ணன் தலைமை வகித்தார். முதல்வர் பாண்டியராஜா ஆண்டறிக்கை வாசித்தார்.

காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்.கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசினார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு துணைவேந்தர் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

விழாவில் பேராசிரியர்கள், முன்னாள் பேராசிரியர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், பங்கேற்றனர்.



▲ தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சிறந்த மாணவிக்கு விருது வழங்கினார் காமராசர் பல்கலை. துணைவேந்தர். எம்.கிருஷ்ணன். படம்: எஸ்.ஜேம்ஸ்


# தியாகராசர் கலைக் கல்லூரி தின விழா

■ மதுரை

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் 70-வது கல்லூரி நாள் விழா நடைபெற்றது.

கல்லூரிச் செயலாளர் ஹரி தியாகராசன் வரவேற்றார். கல்லூரித் தலைவர் தி.கண்ணன் தலைமை வகித்தார். முதல்வர் பாண்டியராஜா ஆண்டறிக்கை வாசித்தார்.

காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்.கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசினார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு துணைவேந்தர் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

விழாவில் பேராசிரியர்கள், முன்னாள் பேராசிரியர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், பங்கேற்றனர்.




▲ தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சிறந்த மாணவிக்கு விருது வழங்கினார் காமராசர் பல்கலை. துணைவேந்தர். எம்.கிருஷ்ணன். படம்: எஸ்.ஜேம்ஸ்

## மருந்து முகாம்

ங்க ஏற்பாடு

டவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த போலியோ தடுப்பு சொட்டு மருந்து, தரம் வாய்ந்தது என உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இம்மருந்து கொடுப்பதால் பக்க விளைவுகள் ஏதும் உண்டாகாது. எனவே, 5 வயதுக்கு உட்பட்ட

தினமலர்
DINAMALAR

**07-03-2019** பக்கம் எண்: 3

# ஆண்டு விழா

**மதுரை, மார்ச் 7 –**

மதுரை தியாகராஜர் கல்லூரியின் 70வது ஆண்டு விழா தலைவர் கருமுத்து கண்ணன் தலைமையில் நடந்தது.

செயலாளர் ஹரி தியாகராஜன் வரவேற்றார். முதல்வர் பாண்டியராஜன் ஆண்டறிக்கை வாசித்தார்.

பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி மதுரை காமராஜ் பல்கலை துணைவேந்தர் கிருஷ்ணன் பேசுகையில் "கல்விக்கு எப்போதும் அழிவில்லை. வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். உயர்கல்விக்கு தேவையான திறமைகளை மாணவர் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆராய்ச்சிகளில் ஆர்வம் வேண்டும்" என்றார்.

THE HINDU

07-03-2019 Page No : 2

# Do not forget your roots: VC

## Exhorts students to analyse problems and create solutions

STAFF REPORTER
MADURAI

Every college should have good environment and uncorrupted governance to ensure that there is uninterrupted learning, according to Vice-Chancellor of Madurai Kamaraj University M. Krishnan.

He was speaking to an audience of young students at Thiagarajar College's 70th College Day celebrations here on Wednesday.

Mr. Krishnan stressed on the need to analyse local problems and create village, town and city-based solutions in order to effectively contribute to society. He prided himself on being an alumnus and recounted his days as an undergraduate and a doctorate scholar at the university.

He said students must return to Thiagarajar College as inventors, discoverers and winners of prestigious awards such as the Nobel prize. "One, however, must not forget their roots and always give back," he added.

"The country needs committed leaders in all fields," said Karumuttu T. Kannan, President, Thiagarajar College of Arts and Science.

The process of self-examination must never stop and everyone must take the time to analyse their deficiencies and work towards bettering it. Those in the last benches could come to centre stage if there was no dearth in aspiration. The college should have more registered patents in the future to improve their status, he said.

V. Pushparaj, third year, B. Com, and K. Hemalakshmi, third year, B.A. English, were adjudged the best outgoing students.

Presenting the annual report, Principal D. Pandiaraj said 90% of the students secured placements in several core companies.

Best outgoing students and achievers in sports, NCC and NSS were given medals and certificates.



M. Krishnan, Vice-Chancellor of Madurai Kamaraj University, presenting an award to a student at Thiagarajar College in Madurai on Wednesday. • S. JAMES

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**15-03-2019** பக்கம் எண்: 5

# மேலக்காலில் தியாகராசர் கல்லூரி என்.எஸ்.எஸ். முகாம் தொடங்கியது

■ மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட (என்.எஸ்.எஸ்.) ஏழு நாள் சிறப்பு முகாம் சோழவந்தான் அருகே மேலக்கால் கிராமத்தில் தொடங்கியது.

விழாவில் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் அருணா ராமச்சந்திரன் வரவேற்றார். முதல்வர் து.பாண்டியராஜா தலைமை வகித்து பேசினார். காமராசர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மோ.பாண்டி முகாமைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

தியாகராசர் கல்லூரி மாணவர் நலன் முதன்மையர் ர.சீனிவாசன் வாழ்த்திப் பேசினார். மேலக்கால் கிராம நிர்வாக அலுவலர் முபாரக், ஊர் முக்கியப் பிரமுகர்கள் பொன் முத்துராமலிங்கம், செல்லையா, கோமான், பிரேம்குமார், மீனாட்சிசுந்தரம், சேகர் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நாட்டு நலப்பணி திட்ட மாணவி ஆர்.ஜாஸ்மின் பாத்திமா நன்றி கூறினார். முதல் நாளில் கிராமப் பள்ளி, கோயில் வளாகத்தை நாட்டுநலப்பணி திட்ட மாணவிகள் சுத்தம் செய்தனர். மாலையில் மாணவிகள் மது விழிப்புணர்வு நாடகம் நடத்தினர். முகாம் நாட்களில் ஒவ்வொரு நாளும் சமூகம், சுற்றுச்சூழல், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சுகாதாரப்பணிகளை மாணவிகள் மேற்கொள்கின்றனர்.



▲ நாட்டு நலப்பணி திட்ட முகாமில் கோயிலைச் சுத்தம் செய்த மாணவிகள்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**15-03-2019** பக்கம் எண்: **24**



சமூக வலைத்தளம் பாதுகாப்பு குறித்து

# கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பேரணி

மேலூர், மார்ச்.15–

மேலூர் அருகே கட்டயன்பட்டி கிராமத்தில் மதுரை தியாகராஜர் கலைக்கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் சார்பில் ஒரு வார முகாம் நடைபெற்று வருகிறது. இதில் சமூக வலைத்தளங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டு, விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி கிராமத்தின் வீதிகள் வழியாக பேரணியாக சென்றனர். மேலும் ஸ்மார்ட் போன் மோகம் மற்றும் சமூக வலைத்தளங்களில் பெண்கள் சிக்கித்தவிக்கும் நிலை குறித்து தெருக்கூத்து நடத்தப்பட்டது. இதுதவிர சமூக வலைத்தளங்களை சரியாக பயன்படுத்துவோம் என்றும், தவறுகளில் இருந்து மற்றவர்களை காப்போம் என்று மாணவ–மாணவிகள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

THE HINDU

18-03-2019 Page No : 2

The National Service Scheme volunteers of Thiagarajar College organised a seven-day special camp at Veppadappu and Poonjuthi from March 7. During the camp, they created an awareness of harm posed by plastic, waste management, voter awareness, and other topics. The volunteers also organised a medical camp, assisted in polio drops administration to the children and treated 173 cattle in the two villages. About 200 saplings were planted in the two panchayats. NSS programme officers S. Saravanajothi, S. Murugan, K. Sathiyadas and M. Selvakumar organised the camp.

தமிழால் இணைவோம்

இந்து தமிழ் திசை

**21-03-2019** பக்கம் எண்: 4

இந்து தமிழ் : Date: 21-3-19 Pg: 4



▲ பள்ளிக் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகம், துணிப்பைகளை வழங்கிய தியாகராசர் கல்லூரி என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர் அருணா ராமச்சந்திரன் மற்றும் மாணவிகள்.

படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

# தியாகராசர் கல்லூரி என்எஸ்எஸ் முகாம் நிறைவு விழா

■ மதுரை

மதுரை அருகே சோழவந்தான் மேலக்கால் கிராமத்தில் தியாகராசர் கல்லூரி நாட்டுநலப் பணித் திட்ட சிறப்பு முகாம் நடந்தது.

முகாம் நாட்களில் மாணவிகள் கிராமத்தில் பள்ளி வளாகத்தை சுத்தம் செய்தல், கால்நடை மருத்துவ முகாம், கோயில் வளாகத்தை சுத்தம் செய்தல், புற்றுநோய் விழிப்புணர்வு, சட்ட விழிப்புணர்வு, ரத்த தான முகாம், பிளாஸ்டிக் விழிப்புணர்வு, எச்.ஐ.வி. விழிப்புணர்வு மற்றும் குளம் தூர் வாருதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்தனர். திட்ட அலுவலர் அருணா ராமச்சந்திரன் தலைமை வகித்தார். மேலக்கால் கள்ளர் அரசு தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகம், துணிப் பைகள் வழங்கினர். மேலக்காலில் மதுரை வா நண்பா குழுவினருடன் மாணவிகள் மரக்கன்றுகளை நட்டனர். அதற்கான பாதுகாப்பு வேலிகளையும் அமைத்தனர்.

நேற்று பிற்பகலில் முகாம் நிறைவு விழா நடந்தது. அரசு கள்ளர் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியை அ. ஆரோக்கியமேரி வரவேற்றார். என்.எஸ்.எஸ். அலுவலர் அருணா ராமச்சந்திரன் முகாம் அறிக்கையை வாசித்தார். காவல் உதவி ஆணையர் (போக்குவரத்து) கே.ஜோசப் நிக்சன் தலைமை வகித்துப் பேசினார். நிகழ்ச்சியில் ஊர்ப் பிரமுகர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**27-03-2019** பக்கம் எண்: 4

# தியாகராசா கல்லூரியில் தேனீ பயிற்சி முகாம்

Date: 27.03.19

■ மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில், மாநில அளவிலான தேனீ வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது.

முகாமில் நேச்சர் கிளப் ஒருங்கிணைப்பாளர் அருணா ராமச்சந்திரன் வரவேற்றார்.

தேனீ வளர்ப்பில் சாதித்த ஜோசபின் செல்வராஜ், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேனீ வளர்ப்பு பற்றி பயிற்சி அளித்தார்.

தென் இந்தியாவிலேயே நாவல் பூவில் தேன் சேகரிக்கும் முதல் நபராக அவர் இருக்கிறார். இவர், தன்னுடைய தொழில் அனுபவத்தையும், நாவல் பூவில் தேன் சேகரிக்கும் பயிற்சி, மழைக் காலம், மற்ற காலங்களில் தேனீப் பெட்டிகளை எப்படி பராமரிப்பது, பாதுகாப்பது என்பது பற்றி மாணவர்களுக்கு விளக்கினார்

தேனீக்களால் கிடைக்கும் பல நன்மைகளை பற்றியும், தேனீக்கள் வளர்ப்பை எப்படி லாபகரமான தொழிலாக மாற்ற முடியும் என்பதை பற்றியும் எடுத்துக் கூறினார். இந்த முகாமில் தியாகராசர் கல்லூரி மாணவர்கள் மட்டுமில்லாது சென்னை, தூத்துக்குடி மற்றும் மதுரையில் உள்ள பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

THE HINDU

27-03-2019 Page No : 2

# College students given insight into world of mental health

## 'Stress leads to restriction in muscle movement'

STAFF REPORTER
MADURAI

Students of Thiagarajar College were given an insight into the world of mental health and the stigma associated with it at a one-day workshop here on Tuesday.

The inaugural session saw Sujatha Malini, Head, Department of Psychology, Alagappa University, addressing the students in areas, including stress, negative thoughts and digitisation.



Sujatha Malini, Head, Department of Psychology, Alagappa University, addressing the students at Thiagarajar College in Madurai on Tuesday. • S. JAMES

"Mental health usually refers to the compatibility between the body and mind. If we think happy thoughts, there will be more elasticity in the body. Stress, on the other hand, can lead to a restriction in muscle movement," she said.

In a bid to curtail negative thought, one must keep their brain active at all times, she said.

She added that ill physical health can be cured if the mind is strong. The professor said students needed to trust their instincts, be independent and take initiatives to do new things. She also said students must work towards creating an identity for themselves and then integrate themselves in society.

"Interest, initiative and industry are the three ingredients necessary for success," she said.

Uma Kannan, vice-president, Thiagarajar College, said that the stigma surrounding mental health will reduce with more open discussion. She said that mental health problems such as anxiety, social phobia, depression and bipolar disorder are on the rise because people rarely pay heed to their mental health.

She stressed on the need to detach self from gadgets as they often create social disconnect. "Take a holistic approach to life, improve self esteem and find a stress outlet," she said.

Principal D. Pandiaraja narrated personal anecdotes and said that timely treatment was necessary in helping those with mental health issues.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**29-03-2019** பக்கம் எண்: **4**




▲ மதுரை தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசினார் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத் தலைவர் ஜெயபாண்டி.

# எய்ட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் செஞ்சுருள் சங்கம் சார்பில் எய்ட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

கல்லூரி நிர்வாகமும், பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கில் கல்லூரி டீன் முருகப்பன் தொடக்க உரையாற்றினார்.

செஞ்சுருள் சங்க கல்லூரி ஒருங்கிணைப்பாளர் உதவிப் பேராசிரியை அருணா ராமச்சந்திரன் வரவேற்றார். நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் செஞ்சுருள் சங்கம் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் எம்.பாண்டி பேசினார்.

மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத் தலைவர் ஜெயபாண்டி, எய்ட்ஸ் பரவும் விதம், அதைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றி விளக்கம் அளித்தார். திருநங்கை மெஹரு னுஷா, 'சமூகத்தின் பார்வை யில் திருநங்கைகள்' என்ற தலைப்பி பேசினார்.

இந்த கருத்தரங்கில் 14 கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினமணி
www.dinamani.com

**31-03-2019** பக்கம் எண்: **3**

மதுரை, மார்ச் 30: மதுரையிலுள்ள கல்லூரிகளில் பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

தியாகராஜர் கல்லூரியில் நடைபெற்ற 36 ஆவது பட்டமளிப்பு விழாவில், காரைக்குடியில் உள்ள மத்திய எலக்ட்ரோ கெமிக்கல் ஆராய்ச்சி (செக்ரி) நிறுவனத்தின் இயக்குநர் என். கலைச்செல்வி, மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கிப் பேசியதாவது: நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மாற்றம் என்ற வார்த்தை முக்கியப் பங்கு வகிக்கிறது.

மதுரையில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பயிற்சி முகாமில் பயிற்சியாளர் ரஞ்சித்குமார் பேசினார்.

மதுரை, ஜூலை 11: விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்பது எப்படி? என்பது குறித்து மாற்றுத்திறனாளிகளுக்கு விளையாட்டு நுணுக்கங்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் மதுரையில் நடந்தது.

இம்முகாமில் உடல்கல்வித்துறை இயக்குனர் செல்வகுமார் வரவேற்றார். முதல்வர் பாண்டியராஜா தலைமை வகித்தார். சர்வதேச விளையாட்டு வீரரும் விளையாட்டு ஆணைய மாற்றுத்திறனாளிகளுக்கான பயிற்சியாளருமான ரஞ்சித்குமார் பேசியதாவது; எந்த ஒரு துறையானாலும் எளிதில் வெற்றி பெற முடியாது. அதுபோலத்தான் விளையாட்டுத்துறையிலும் கடின உழைப்பு தேவை.

மத்திய, மாநில அரசுகள் மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு சம உரிமை, சம வாய்ப்பு, சம பங்களிப்பை தர முன்வந்துள்ளது. விளையாட்டுத்துறையில் சாதாரண பிரிவினருக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு உள்ளது போல மாற்றுத்திறனாளிகளை பிரித்துப்பார்க்காமல் வழங்கப்படுகிறது. தினமும் பயிற்சி எடுத்தால் உலகஅளவில் சாதிக்க முடியும். மாற்றுத்திறனாளிகளுக்கு சலுகைகள், உதவித்தொகை வழங்கப்படுகிறது என்றார்.

பின்னர் அவர் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு ஒவ்வொரு விளையாட்டிலும் உள்ள நுணுக்கங்கள், போட்டிக்கு எப்படி தயார் செய்வது, பங்கேற்பது உள்ளிட்டவைகள் குறித்து பயிற்சியும் விளக்கவும் அளித்தார். விளையாட்டுக்குழு உறுப்பினர் கற்பகம் நன்றி கூறினார்.

THE HINDU

13-07-2019 Page No : 4

# B. Com. (Honours) started at Thiagarajar College

## 'Scope for commerce education has increased'

STAFF REPORTER
MADURAI

Thiagarajar College introduced its fifth course in its commerce programme – B. Com (Honours) – with syllabus aligned to ensure students can face their chartered accountancy exams with ease, here on Friday.

College president Karumuttu T. Kannan said that the course was planned, syllabus decided and approvals sought within a period of three months.

"Accountants will have no dearth of opportunities if they pay close attention to the curriculum," he said.

The scope for commerce education and the students applying to these courses had increased marginally, according to secretary Karumuttu T. Thiagarajan.

He added that commerce students with good skill sets will be handsomely rewarded due to the high demand for good chartered accountants. Principal D. Pandiaraja said the course was designed in such a manner that students who complete their fourth semester can write the second-level of examination – the intermediate examinations for CA, and can appear for the final exams at the end of the sixth semester.



Chinnaswamy Ganesan of CNGSN & Associates LLP, speaking at the inauguration of B.Com (Honours) at Thiagarajar College in Madurai on Friday. ▪S. JAMES

"There are designated professors who will teach theory subjects and professional chartered accountants who will be adjunct faculty, teaching the practical application of your knowledge," he said. The course was designed with help from Chinnaswamy Ganesan of CNGSN and Associates LLP, Chennai.

Mr. Ganesan who was chief guest at the inauguration function, said that most students faced the dilemma of going to college or spending money for private CA classes.

"Through this course, students will be able to attain top level commerce graduation and will be ready to face their CA exams at the end of their course. It also prepares them for further studies abroad. Being a chartered accountant is the highest professional course in the country. It can uplift an entire family," he said.

Mr. Kannan said that the facilities available at the college like the Business Lab must be effectively utilised. It should be a space to debate ideas regarding business and should help students grow, he said.

He insisted that students should read business papers to gain a grasp of the subject.

16-07-2019 பக்கம் எண்: 14

# பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு கலை இலக்கியப் போட்டிகள்

## இராமலிங்கர் பணிமன்றம் ஏற்பாடு

**சென்னை, ஜூலை 15:** அருட்செல்வர் நா.மகாலிங்கம் நினைவாக சென்னை இராமலிங்கர் பணி மன்றத்தின் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இந்த ஆண்டுக்கான (2019) மண்டல, மாநில அளவிலான இலக்கியப் போட்டிகள் வரும் ஆகஸ்ட் 10-ஆம் தேதி முதல் தொடங்கவுள்ளன.

இது குறித்து சென்னை இராமலிங்கர் பணி மன்றச் செயலர் சி.இராமசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

அருட்செல்வர் நா.மகாலிங்கம் நினைவாகவும், சென்னை இராமலிங்கர் பணி மன்றத்தின் 54-ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையிலும் கடந்த ஆண்டுகளைப் போன்று இந்த ஆண்டும் மாநில அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கலை, இலக்கியப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள் தமிழகம், புதுச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் எட்டு மண்டலங்களாகப் பிரித்து அந்தந்தப் பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் நடத்தப்படவுள்ளன.

**கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள் (இளநிலை, முதுநிலை மாணவர்கள் மட்டும்):**

**கட்டுரைப் போட்டி:** 'பார் திருத்த வந்த சீர்திருத்த ஞானி வள்ளலார்' அல்லது 'தமிழ் மரபில் பூத்த அருள் மலர் இராமலிங்கர்' என்ற தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் 8 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**பேச்சுப் போட்டி:** 'வள்ளுவ மொழியே வள்ளலார் வழி' அல்லது 'மனித நேயமே மகாத்மா வாழ்வு'.

**பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் (9-ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை):**

**இசைப் போட்டி:** அருள் விளக்க மாலையில் தெரிவு செய்த பாடல்கள் அல்லது 'அற்புதம் அற்புதமே', 'எனக்கும் உனக்கும்', 'வருவார் அழைத்து வாடி', 'ஆடிய பாதம்' ஆகிய வள்ளலார் பாடல்களில் ஒன்று (தனி நபராகவோ அல்லது இருவர் கொண்ட குழுவாகவோ பங்கேற்கலாம்).

**மனனப் போட்டி:** திருவருள் விலாசப் பத்து- 'ஆறுமுகப் பெருங்கருணை' தொடங்கி 10 பாடல்கள்.

**பேச்சுப்போட்டி:** 'சன்மார்க்கமே உலக சாந்தி மார்க்கம்' அல்லது 'சத்தியமே காந்தி- காந்தியமே சத்தியம்'.

**மண்டல அளவில் போட்டிகள் நடைபெறும் இடங்கள்:** **திருச்சி** (ஆகஸ்ட் 10)- இ.ஆ.பெ. விகவநாதம் மேல்நிலைப்பள்ளி (மக்கள் மன்றம் அருகில்), தில்லை நகர், திருச்சி; **சேலம்** (ஆக.17)- பெரியார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலை. நகர், சேலம்; **சென்னை** (ஆக.18)- சாவித்திரி அம்மாள் ஓரியண்டல் மேல்நிலைப் பள்ளி (சென்னை சமஸ்கிருத கல்லூரி பின்புறம்), ராயப்பேட்டை நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை; **மதுரை** (ஆக.24)- தியாகராசர் கல்லூரி, காமராஜர் சாலை, மதுரை; **திருநெல்வேலி** (ஆக.25)- விட்டில் பிளவர் மாடல் பள்ளி, சேரன்மகாதேவி சாலை, கோமதீஸ்வரன் நகர் எதிர்புறம், நெல்லை நகரம்; **கோவை** (ஆக.31)- டாக்டர் என்ஜிபி கலை அறிவியல் கல்லூரி, காளப்பட்டி சாலை, நேருநகர், கோவை.

மண்டல அளவில் ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் பத்து இடங்களைப் பெறுபவர்கள் சிறப்புப் பயிலரங்கத்தில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெறுவார்கள். வரும் டிசம்பர் மாதம் பொள்ளாச்சி டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியில் இருநாள் பயிலரங்கம் நடைபெறும்.

**பரிசு எவ்வளவு?:** மண்டல அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு முதல் மூன்று பரிசுகளாக ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 வழங்கப்படும். அதேபோன்று மாநில அளவில் வெற்றி பெறுவோருக்கு முதல் மூன்று பரிசுகளாக ரூ.10,000, ரூ.7,500, ரூ.5,000 வழங்கப்படும்.

**போட்டியில் பங்கேற்க...**

போட்டியில் பங்கேற்பதற்கான விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்ய www.mcet.in என்ற இணையதளத்தைப் பயன்படுத்தலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 'இராமலிங்கர் பணி மன்றம், டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி, உடுமலை சாலை, பொள்ளாச்சி- 642 003' என்ற முகவரிக்கோ அல்லது ramalingar@mcet.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ போட்டி நடைபெறுவதற்கு 5 நாள்கள் முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். இது குறித்து மேலும் தகவல் பெற 94456 37190, 99761 44451 ஆகிய செல்லிடப்பேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

THE NEW INDIAN EXPRESS

**19-07-2019** **Page No : 2**

**D Pandiaraja,** **principal, Thiagarajar College of Arts and Science**

The process of making India a global education hub will be a gradual one; it will take at least 20 to 30 years to achieve it. If we plan to welcome more international students, we should first improve the infrastructure of college campuses and quality of the faculty. Apart from students, we should also hire professors or college faculty from other countries. Having international students and teachers onboard, colleges or universities from India can find a space in the top-100 or top-200 global educational institutions list as it is a criterion to enter it. Our curriculum should be made flexible and we should also promote more courses related to science and environment. The government shouldn't restrict expenditure of funds on top notch colleges but also consider a broader list of deserving colleges.



தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

22-07-2019 பக்கம் எண்: 3



▲ இயற்கைப் பொருட்காட்சியில் பள்ளி மாணவர்களுக்கு மழை நீர் சேகரிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார் பேராசிரியர் அருணா.

# மாணவர்களுக்கு தண்ணீர் சிக்கன விழிப்புணர்வு

■ மதுரை

மதுரை தமுக்கம் மைதானத்தில் மண் மணக்கும் தூய்மை மதுரை என்ற தலைப்பிலான இயற்கை பொருட்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கி 3 நாட்களாக நடைபெற்றது.

இக்கண்காட்சியில் திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் சேகரிப்பு, வீட்டுத் தோட்டம், குப்பையை உரமாக்கும் சாதனங்கள், பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்று சாதனங்கள், இயற்கை உரம் தயாரிப்பு முறை, பாரம்பரிய உணவுகள் உள்ளிட்ட 125 ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்தன. மதுரை தியாகராசர் கல்லூரி நாட்டு நலப் பணித் திட்டம், நேச்சுரல் கிளப் சார்பில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு அளிக்கும் ஸ்டால் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த ஸ்டாலில் மழைநீர் சேகரிப்பின் அவசியம், தண்ணீர் சிக்கனம் குறித்து அக்கல்லூரி பேராசிரியர் அருணா பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

24-07-2019 பக்கம் எண்: 4

# மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு

■ மதுரை

மதுரை அருகே புளியங்குளம் கிராமத்தில் தெப்பக்குளம் தியாகராசர் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பணியில் ஈடுபட்டனர்.

மழைநீர் சேகரிப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி மாணவர்கள் பேரணியாகப் புறப்பட்டு பொதுமக்களிடம் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைப்பதன் அவசியம், அதன் பயன்களை எடுத்துக் கூறினர். நாட்டு நலப்பணிதிட்ட அலுவலர் உதவிப் பேராசிரியை அருணா ராமச்சந்திரன் தலைமையில் மாணவர்கள் வீடு, வீடாகச் சென்று மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்க வலியுறுத்தினர்.

மேலும், புளியங்குளம் அரசு உயர்நிலைப்பள்ளி, புளியங் குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர்கள் மத்தியில் மழைநீர் சேகரிப்பு பற்றி எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து நாட்டுநலப்பணித் திட்ட மாணவர்கள் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதைப்பந்துகளை தயார் செய்து அப்பகுதியில் பரப்பினர்.



▲ மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து மாணவர்கள் மத்தியில் பேசிய உதவிப் பேராசிரியை அருணா ராமச்சந்திரன்.

THE HINDU

29-07-2019 Page No : 5

*In remembrance of*

*Kalaithanthai Karumuttu*

**Thiagarajan Chettiar**



சித்தத்துட் சிவத்தை
வைத்தார்
செந்தமிழ் நாவில்
வைத்தார்
வித்தகம் தொழிலில்
வைத்தார்
விருப்பினைத் தொண்டில்
வைத்தார்

எத்திசைப் புகழும்
வைத்தார்
எளியவர் வாழ
வைத்தார்
அத்தனாம் தியாகராசர்
அன்னவரைக் கருத்துள்
வைப்போம்

1893 - 1974

"His life was an inspiration. His memory is a benediction."

**Thiagarajar Mills,** Madurai & Branches, **VTM Ltd,** Virudhunagar
**Thiagarajar College of Engineering,** Madurai.
**Thiagarajar College,** Madurai

THE HINDU

29-07-2019 Page No : 2



(Top) students planting saplings on the satellite campus of Lady Doak College; (above) Awareness programme on violence against women under way at Thiagarajar College

CAMPUS CONNECT

## Awareness programme

Girl students should have self-confidence to protect themselves from violence against women, said A. Kathir, executive director of Evidence, a human rights organisation based in Madurai. He was addressing the students of Women's Studies Centre of Thiagarajar College, during an awareness programme titled 'Raise the cudgel against violence on women' held in Madurai on July 25. He said parents must be open to discuss harassment that their daughters faced in society. Nearly 200 students interacted with Mr. Kathir and expressed their desire to see more workshops to sensitise students to gender issues. Subathra Devi, director of the centre, elaborated on health hazards faced by women. I. Chitra, coordinator of the centre, proposed the vote of thanks.

## Saplings planted

A. Mahalakshmi, Assistant Professor, Department of Zoology, Lady Doak College, and Sujatha, programme officer of Lady Doak Eco Brigade, organised a sapling planting drive on the college's satellite campus on July 24. Roopa Ravikumar, Associate Professor, Department of Social Sciences, spoke about the history of the campus. Pasumai Hari Babu of Government Higher Secondary School in Anaiyur spoke on the importance of trees.

## French for women





(Top) students planting saplings on the satellite campus of Lady Doak College; (above) Awareness programme on violence against women under way at Thiagarajar College

Girl students should have self-confidence to protect themselves from violence against women, said A. Kathir, executive director of Evidence, a human rights organisation based in Madurai. He was addressing the students of Women's Studies Centre of Thiagarajar College, during an awareness programme titled 'Raise the cudgel against violence on women' held in Madurai on July 25. He said parents must be open to discuss harassment that their daughters faced in society. Nearly 200 students interacted with Mr. Kathir and expressed their desire to see more workshops to sensitise students to gender issues. Subathra Devi, director of the centre, elaborated on health hazards faced by women. I. Chitra, coordinator of the centre, proposed the vote of thanks.

Saplings planted

A. Mahalakshmi, Assistant Professor, Department of Zoology, Lady Doak College, and Sujatha, organised a sapling planting drive on the college's satellite campus on July 24. Roopa Ravikumar, Associate Professor, Department of Social Sciences, spoke about the history of the campus. Pasumai Hari Babu of Government Higher Secondary School in Anaiyur spoke on the importance of trees.

DINAMALAR

29-07-2019 பக்கம் எண்: 7



www.dinamani.com

30-07-2019 Pg No: 04

# தியாகராஜர் கல்லூரியில் சிறப்புச் சொற்பொழிவு

மதுரை, ஜூலை 29: மதுரை தியாகராஜர் கல்லூரியில் கருமுத்து தியாகராச செட்டியார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவில் பேராசிரியர் மு. அருணகிரி எழுதிய, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி உரை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. நூலாசிரியர் மு.அருணகிரி நூல் அறிமுகம் செய்தார். நூலின் முதற்படியை கல்லூரிச் செயலர் கருமுத்து க.தியாகராசன் பெற்றுக் கொண்டு பேசியது:

கருமுத்து தியாகராஜ செட்டியாரை நினைவு கூற வேண்டுமெனில் ஒவ்வொருவரும் திருவாசகத்தை படித்தாலே போதும் என்றார். கட்டுரைப் போட்டிக்கான முதல் பரிசு மதுரைக் கல்லூரியைச் சேர்ந்த ஜனனி, இரண்டாம் பரிசு பாத்திமா கல்லூரியைச் சேர்ந்த தாட்சாயினி, மூன்றாம் பரிசு தியாகராஜர் கல்லூரியைச் சேர்ந்த பாலமணிகண்டன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து பேராசிரியர் கி.சிவக்குமார் 'இரண்டுமிலித்தனியனேன்' - திருச்சதகம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். முன்னதாக மதுரை காமராஜர் பல்கலைக் கழக தமிழ்புலத் தலைவர் ராமராஜ பாண்டியன் வரவேற்றார். கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் இராம. மலர்விழி மங்கையர்க்கரசி நன்றி கூறினார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

30-07-2019 Pg No: 03

# தியாகராசர் கல்லூரி நிறுவனர் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு

**மதுரை:** தியாகராசர் கல்லூரியில் கருமுத்து தியாகராசச் செட்டியாரின் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நடந்தது. காமராசர் பல்கலைகழக தமிழியல்புலத் தலைவர் ராமராஜ பாண்டியன் வரவேற்றார். தகைசால் பேராசிரியர் மு.அருணகிரியின் 'மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி' உரைநூல் நூல் வெளியிடப்பட்டது. நூலாசிரியர் நூல் அறிமுகம் செய்தார்.

கல்லூரிச் செயலாளர் கருமுத்து க.தியாகராசன் வாழ்த்திப் பேசும்போது, கலைத்தந்தையை நினைவு கூற வேண்டுமெனில் ஒவ்வொருவரும் திருவாசகத்தைப் படித்தாலே போதும்,என்றார்.

தொடர்ந்து கலைத் தந்தை கட்டுரைப் போட்டிக்கான முடிவுகளை தமிழ்த்துறைத் தலைவர் மலர்விழி மங்கையர்கரசி வெளியிட்டார். மதுரைக் கல்லூரி மாணவி ஜனனி முதல் பரிசும், பாத்திமா கல்லூரி மாணவி தாட்சாயினி இரண்டாம் பரிசும், மூன்றாம் பரிசை தியாகராசர் கல்லூரி மாணவர் பாலமணி கண்டனும் முறையே ரூ.3,000, ரூ.2,000, ரூ.1000 என பெற்றனர். பேராசிரியர் கி.சிவக்குமார் சிறப்புரையாற்றினார்.

தமிழால் இணைவோம்

இந்து தமிழ் திசை

**30-07-2019** **Pg No: 04**



▲ அழகர்கோயில் மலையில் சேகரித்த 50 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளுடன் தியாகராசர் என்எஸ்எஸ் மற்றும் நேச்சர் கிளப் மாணவர்கள்.

## அழகர்கோயில் மலையில்

# 50 கிலோ பிளாஸ்டிக் குப்பைகளை அப்புறப்படுத்திய மாணவர்கள்

■ மதுரை

மதுரை அழகர்கோயில் மலையில் தியாகராசர் கல்லூரி நேச்சர் கிளப் மற்றும் நாட்டுநலப்பணித் திட்ட மாணவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் பணியை மேற்கொண்டனர்.

உதவிப் பேராசிரியர் அருணா ராமச்சந்திரன் தலைமையில் மாணவர்கள் மலைப்பகுதியில், நடைபாதைகளில் பக்தர்கள் வீசிச் சென்ற பிளாஸ்டிக் பைகள், கழிவுகளைச் சேகரித்தனர். சுமார் 50 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்து அவற்றை பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.

தினமணி

www.dinamani.com

30-07-2019 Pg No: 04

# தியாகராஜர் கல்லூரியில் சிறப்புச் சொற்பொழிவு

**மதுரை, ஜூலை 29:** மதுரை தியாகராஜர் கல்லூரியில் கருமுத்து தியாகராச செட்டியார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவில் பேராசிரியர் மு. அருணகிரி எழுதிய, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி உரை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. நூலாசிரியர் மு.அருணகிரி நூல் அறிமுகம் செய்தார். நூலின் முதற்படியை கல்லூரிச் செயலர் கருமுத்து க.தியாகராசன் பெற்றுக் கொண்டு பேசியது:

கருமுத்து தியாகராஜ செட்டியாரை நினைவு கூற வேண்டுமெனில் ஒவ்வொருவரும் திருவாசகத்தை படித்தாலே போதும் என்றார். கட்டுரைப் போட்டிக்கான முதல் பரிசு மதுரைக் கல்லூரியைச் சேர்ந்த ஜனனி, இரண்டாம் பரிசு பாத்திமா கல்லூரியைச் சேர்ந்த தாட்சாயினி, மூன்றாம் பரிசு தியாகராஜர் கல்லூரியைச் சேர்ந்த பாலமணிகண்டன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து பேராசிரியர் கி.சிவக்குமார் 'இரண்டுமிலித்தனியனேன்' - திருச்சதகம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். முன்னதாக மதுரை காமராஜர் பல்கலைக் கழக தமிழ்புலத் தலைவர் ராமராஜ பாண்டியன் வரவேற்றார். கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் இராம. மலர்விழி மங்கையர்க்கரசி நன்றி கூறினார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

30-07-2019 Pg No: 03

# தியாகராசர் கல்லூரி நிறுவனர் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு

**மதுரை:** தியாகராசர் கல்லூரியில் கருமுத்து தியாகராசச் செட்டியாரின் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நடந்தது. காமராசர் பல்கலைகழக தமிழியல்புலத் தலைவர் ராமராஜ பாண்டியன் வரவேற்றார். தகைசால் பேராசிரியர் மு.அருணகிரியின் 'மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி' உரைநூல் நூல் வெளியிடப்பட்டது. நூலாசிரியர் நூல் அறிமுகம் செய்தார்.

கல்லூரிச் செயலாளர் கருமுத்து க.தியாகராசன் வாழ்த்திப் பேசும்போது, கலைத்தந்தையை நினைவு கூற வேண்டுமெனில் ஒவ்வொருவரும் திருவாசகத்தைப் படித்தாலே போதும்,என்றார்.

தொடர்ந்து கலைத் தந்தை கட்டுரைப் போட்டிக்கான முடிவுகளை தமிழ்த்துறைத் தலைவர் மலர்விழி மங்கையர்கரசி வெளியிட்டார். மதுரைக் கல்லூரி மாணவி ஜனனி முதல் பரிசும், பாத்திமா கல்லூரி மாணவி தாட்சாயினி இரண்டாம் பரிசும், மூன்றாம் பரிசை தியாகராசர் கல்லூரி மாணவர் பாலமணி கண்டனும் முறையே ரூ.3,000, ரூ.2,000, ரூ.1000 என பெற்றனர். பேராசிரியர் கி.சிவக்குமார் சிறப்புரையாற்றினார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

30-07-2019 Pg No: 04



அழகர்கோயில் மலையில் சேகரித்த 50 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளுடன் தியாகராசர் என்எஸ்எஸ் மற்றும் நேச்சர் கிளப் மாணவர்கள்.

அழகர்கோயில் மலையில்

# 50 கிலோ பிளாஸ்டிக் குப்பைகளை அப்புறப்படுத்திய மாணவர்கள்

மதுரை

மதுரை அழகர்கோயில் மலையில் தியாகராசர் கல்லூரி நேச்சர் கிளப் மற்றும் நாட்டுநலப்பணித் திட்ட மாணவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் பணியை மேற்கொண்டனர்.

உதவிப் பேராசிரியர் அருணா ராமச்சந்திரன் தலைமையில் மாணவர்கள் மலைப்பகுதியில், நடைபாதைகளில் பக்தர்கள் வீசிச் சென்ற பிளாஸ்டிக் பைகள், கழிவுகளைச் சேகரித்தனர். சுமார் 50 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்து அவற்றை பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.

தினமலர்
DINAMALAR

# ‘இயற்கையை காக்க பஞ்சபூத வழிபாட்டுக்கு திரும்புங்கள்’

## சுவாமி ராமானந்தா வேண்டுகோள்

மதுரை, ஜூலை 31–

“இயற்கையை பாதுகாக்க பஞ்சபூத வழிபாட்டுக்கு திரும்புங்கள்,” என, மதுரைவைகை பெருவிழா வேண்டியார்கள் மாநாட்டில் சுவாமி ராமானந்தா வேண்டுகோள் விடுத்தார்.

தியாகராஜர் கல்லூரி செயலர் ஹரி தியாகராஜன் தலைமை வகித்தார். கவுமார மடாலய சிரவையாதீனம் சுவாமி ராமானந்தா பேசியதாவது: கலாசாரம், பாரம்பரியத்தை புறிகொடுத்து வருகிறோம். நதிகள், இயற்கையை காக்க தவறுகிறோம். முன்னோர்கள் பஞ்சபூத வழிபாட்டை தீவிரமாக மேற்கொண்டனர். நாம் படிப்படியாக அவ்வழிபாட்டை காவு கொடுக்கிறோம்.

தீ, நிலம், காற்று, ஆகாயத்தை மாசுபடுத்தி, அவற்றின் விளைவையும் அனுபவிக்கிறோம். புதுப்புது நோயால் மனிதன் பாதிக்கப்படுகிறான். இப்பாதிப்பில் இருந்து மீண்டுவர பஞ்சபூத வழிபாட்டுக்கு திரும்ப வேண்டும். இயற்கையை வழிபட்டு காக்க வேண்டும். அப்போதுதான் இயற்கையின் பலனை அனுபவிக்க முடியும் என்றார்.

அழகர்கோவில் எம்.வி.எம்.எம்., கல்லூரி முதல்வர் அருணகிரி, ஓய்வுபெற்ற கல்லூரி பேராசிரியை ஞானபூங்கோதை, திருவாசக பிச்சையா ஆகியோர் திருவாசகத்தின் சிறப்புகளை விளக்கினர். திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மைய பொருளாளர் சரவணன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை மைய ஒருங்கிணைப்பாளர்கள் முருகேசன், சந்திரசேகரன் செய்தனர்.

**கே.ஆர்.எஸ்., மாணவர்களின் கலைநிகழ்ச்சி**

பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் ராஜாஜிபுரம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் முத்துலட்சுமி தலைமையில் நடந்தது. மதுரை கே.ஆர்.எஸ்., பள்ளி மாணவ, மாணவியரின் கண்ணப்பர் புராணம் மீனாட்சி திருக்கல்யாணம் குறித்த நாட்டிய நாடகம் வில்லுப்பாட்டு உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடந்தன.



## ரூ.10 கோடி மின் கட்டண பாக்கி செலுத்திய கிராம ஊராட்சிகள்

மதுரை, ஜூலை 31–

மதுரை மாவட்டத்தில் மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய பத்து கோடி ரூபாய் மின் கட்டணத்தை நேற்று நடந்த சிறப்பு முகாமில் கிராம ஊராட்சிகள் செலுத்தின.

மாவட்டத்தில் 420 கிராம ஊராட்சிகளுக்குட்பட்டு 1600 கிராமங்கள் உள்ளன. ஊராட்சி பகுதிகளிலுள்ள தெரு விளக்குகள், மேல்நிலை குடிநீர் தொட்டிகளுக்கு தேவைப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை மின் வாரியத்திற்கு நிர்வாக செலுத்திவிடும். சில ஆண்டுகளாக கட்டணம் முறையாக செலுத்தப்படாததால் 10 கோடி ரூபாய் பாக்கியிருந்தது. மற்ற மாவட்டங்களிலும் இதே நிலையிருந்தது. இதுகுறித்து ஆய்வு நடத்திய மின் வாரிய தலைவர் விக்ரம்கபூர், ஊரக வளர்ச்சி இயக்குனர் பாஸ்கரன் ஆகியோர் சிறப்பு முகாம் நடத்தி கட்டணம் வசூலிக்க அறிவுறுத்தினர்.

மதுரையில் நேற்று நடந்த முகாமில் ஊராட்சிகளுக்கான உதவி இயக்குனர் செல்லத்துரை, மின்வாரிய செயற் பொறியாளர் அழகுமணிமாறன், அதிகாரி பாலசுப்பிரமணியன் பங்கேற்றனர். ஊராட்சிகள் சார்பில்

தமிழால் இணைவோம்

இந்து தமிழ் திசை

31-07-2019 பக்கம்.எண்: 3

# நதிகளை புறக்கணித்துவிட்டு வாழ முடியாது

● வைகை பெருவிழாவில் உபி அமைச்சர் கருத்து



▲ வைகைப் பெருவிழாவில் பேசிய உத்தரப்பிரதேச மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் சவுத்ரி. படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

■ மதுரை

மதுரையில் வைகைப் பெருவிழா கடந்த 24-ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது. நேற்று காலை திருவாசக முற்றோதுதல் நடந்தது. இதில், சிரவையாதீனம் கவுமார மடாலயம் ஸ்ரீலஸ்ரீ ராமானந்த குமர குருபர சுவாமிகள் பேசினார். தியாகராசர் கல்லூரிச் செயலாளர் கருமுத்து க.தியாகராஜன் தலைமை வகித்தார்.

அழகர்கோவில் எம்ஏவிஎம்எம் கல்லூரி முதல்வர் எம்.அருணகிரி, தியாகராசர் கல்லூரி முன்னாள் பேராசிரியர் ஞானப் பூங்கோதை திருவாசக சிறப்புரை வழங்கினர். திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மையப் பொருளாளர் எம்.சரவணன், அமைப்பாளர் எம். முருகேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பிற்பகலில் நடந்த சிவனடியார்கள் மாநாட்டுக்கு ராமநாதபுரம் அரசு கலைக்கல்லூரியின் ஓய்வுபெற்ற முதல்வர் முத்துலெட்சுமி தலைமை வகித்தார். மேலமங்கலம் ஸ்ரீலஸ்ரீ பாலயோகி திருமடம் ஸ்ரீலஸ்ரீ குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் பேசினர். திருவிளையாடல் புராண ஆராய்ச்சிமையத் தலைவர் கா.சந்திரசேகரன் வரவேற்றார். சிவானந்த தபோவனம் பூஜ்யஸ்ரீ சுவாமி சிவானந்த சுந்தரானந்தா தலைமை வகித்துப் பேசினார். மாலையில் வைகை நதிக்கு ஆரத்தி வழிபாடு நடந்தது.

விழாவில் உத்தரப்பிரதேச மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் சவுத்ரி கலந்து கொண்டு பேசுகையில், தண்ணீரையும், நதிகளையும் புறக்கணித்துவிட்டு வாழ முடியாது. நதிகளும், மரங்களுமே நாட்டின் பெருமை. அவற்றை அடுத்த தலைமுறைக்குப் பாதுகாக்க வேண்டும். நதிகளைப் பாதுகாக்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில்தான் வைகை ஆற்றில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கலாச்சார மையம் அமைக்கப்படுகிறது. என்றார்.

விழாவில் கலைநிகழ்ச்சி, நாட்டிய நிகழ்ச்சி நடந்தது.


தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

31-07-2019 பக்கம்.எண்: 3

# கட்டுரை போட்டி பரிசளிப்பு விழா

■ மதுரை

கப்பலூர் தியாகராசர் ஆலை மேனிலைப்பள்ளியில், தேசிய மரபு அறக்கட்டளை சார்பில் கலைத்தந்தை கருமுத்து தியாகராசனாரின் வாழ்வும் செயலும் என்ற தலைப்பிலான கட்டுரைப்போட்டி பரிசளிப்பு விழா நடைபெற்றது.

முன்னாள் முதன்மைக் கல்வி அலுவலர் அ.கோபால கிருட்டிணன் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியை லோ.முத்துலக்குமி முன்னிலை வகித்தார். ஆசிரியை ஆ.ராசி வரவேற்றார்.

விழாவில், உலகத் தமிழ் அருங்காட்சியகம் அமைப்பதற்கான நோக்கம், கருமுத்து தியாகராசனாரின் தமிழ் தொண்டு குறித்து தேசிய மரபு அறக்கட்டளை நிறுவனர் அ.அறிவன் பேசினார். பின்னர், கட்டுரை, தமிழிலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பொறுப்பாளர் பா.வே. பாண்டியன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். ஆசிரியை சே.ராதிகா நன்றி கூறினார்.

தினமணி
www.dinamani.com

31-07-2019 பக்கம்.எண்: 5

# மக்களிடம் இயற்கை மீதான பக்தி குறைந்து விட்டது

## உ.பி. மாநில அறநிலையத்துறை அமைச்சர் பேச்சு

மதுரை, ஜூலை 30: இயற்கையின் மீதான பக்தி மக்களிடம் குறைந்து வருவதால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என்று உத்தரப் பிரதேச மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் லட்சுமி நாராயண சௌத்ரி பேசினார்.

மதுரையில் நடைபெற்று வரும் வைகைப் பெருவிழா 2019-இன் சிறப்பு மலர் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இதில் உத்தரப் பிரதேச மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் லட்சுமி நாராயண சௌத்ரி சிறப்பு விருந்தினராக பங்கேற்று விழா மலரை வெளியிட்டு பேசியது:

நமது முன்னோர்கள் இயற்கையை தெய்வமாக வழிபட்டு வந்தனர். இதனால் அப்போது இயற்கை அழிவில்லாமல் பாதுகாக்கப்பட்டது. மேலும் நதிகள், ஆறுகள், குளங்களையும் தெய்வத்தின் அம்சங்களாக மதித்து வந்ததால் அவற்றை அசுத்தப்படுத்தவும் தயங்கினர். மரங்களை தெய்வத்தின் வடிவமாக பார்த்ததால் மரங்களை வெட்டத் தயங்கினர். ஆனால், தற்போது இயற்கை மீதான பக்தி மக்களிடம் குறைந்து வருகிறது. இதனால் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகிறது. நதிகள், ஆறுகள் மாசுப்படுத்தப்படுகின்றன. இது இயற்கைக்கு நாம் செய்யும் தீங்காகும். இயற்கை என்பது கடவுளின் படைப்பாகும். இயற்கை நிந்திப்பது கடவுளை நிந்திப்பதாகும்.

தமிழகம் ஆன்மிக பூமி. எப்போதும் ஆன்மிகத்துக்கு ஆதரவளிக்கும் பூமி. எனவே இயற்கையை பாழ்படுத்துவது, நதிகளை அசுத்தப்படுத்துவதை தடுக்க மக்கள் இணைந்து நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்றார்.

## வைகைப் பெருவிழாவில் சிவனடியார்கள் மாநாடு

மதுரை, ஜூலை 30: மதுரையில் நடைபெற்று வரும் வைகைப் பெருவிழாவில் சிவனடியார்கள் மாநாடு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மதுரையில் அகில பாரதிய சந்நியாசிகள் சங்கம் சார்பில் வைகைப் பெருவிழா 2019 ஜூலை 24-இல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதையொட்டி பல்வேறு சிறப்பு மாநாடுகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக சிவனடியார்கள் மாநாடு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் கௌமார மடாலய சிரவையாதீனம் ராமானந்த குமரகுருபர சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். இதையடுத்து திருவாசக முற்றோதல் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தியாகராஜர் கல்லூரி செயலர் கருமுத்து கே. தியாகராஜன் தலைமை வகித்தார். பேராசிரியை மோ. ஞானப்பூங்கோதை குழுவினர் மற்றும் கிருஷ்ணகிரி சிவனடியார்கள் குழுவினர் முற்றோதலை நடத்தினர்.

இதைத்தொடர்ந்து திருவாசக சிறப்புரை நடைபெற்றது. இதில் ஆயிர வைசியர் கல்லூரி முதல்வர் எம். அருணகிரி, ஞானப்பூங்கோதை, திருவாசக பிச்சையா, மேகாலய முன்னாள் ஆளுநர் வி. சண்முகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதைத் தொடர்ந்து பிற்பகலில் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருவிளையாடல் கதம்ப விழா, திருவிளையாடல் நாட்டியம் ஆகிய நிகழ்ச்சிகளில் மாணவ, மாணவியர் பங்கேற்றனர். மதுரை காமராஜர் பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினர் எஸ். நீதையாளன் நன்றி கூறினார்.

இதையடுத்து மாலை நிகழ்ச்சிகள் தொடங்கின. இதில் மாலை 6 மணிக்கு வைகை நதிக்கு ஆரத்தி வழிபாடு நடைபெற்றது. தொடர்ந்து சுவாமி நியமானந்தா, குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை வழங்கினர். நிகழ்ச்சியில் திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மையத் தலைவர் சிவா கா. சந்திரசேகரன் வரவேற்றார். சிவானந்த தபோவனம் தலைவர் சுவாமி சிவானந்த சுந்தரானந்தா தலைமை வகித்தார். வைகையில் திருவிளையாடல் என்ற தலைப்பில் கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம் சொற்பொழிவாற்றினர். இதில் ஏராளமான சிவனடியார்கள் மற்றும் பக்தர்கள் பங்கேற்றனர்.

தினமலர்
DINAMALAR

**02-08-2019** **க்கம்.எண்: 21**

## • அறக்கட்டளை சொற்பொழிவு

மதுரை தியாகராஜர் கல்லூரியில் கருமுத்து தியாகராஜர் செட்டியார் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு தமிழ்த்துறை சார்பில் நடந்தது. மதுரை காமராஜ் பல்கலை பேராசிரியர் ராமராஜ பாண்டியன் வரவேற்றார். பேராசிரியர் அருணகிரியின் 'மதுரை பதிற்றுப்பத்தந்தாதி' உரைநூல் வெளியீட்டு விழா நடந்தது. செயலாளர் தியாகராஜன் வாழ்த்தி பேசினார்.

கட்டுரை போட்டியில் முதல் பரிசு மதுரை கல்லூரி மாணவி ஜனனி, 2ம் பரிசு பாத்திமா கல்லூரி தாட்சாயினி, 3ம் பரிசு தியாகராஜர் கல்லூரி பாலமணிகண்டன் பெற்றனர். பேராசிரியர் சிவக்குமார் உள்ளிட்டோர் பேசினர். தமிழ்த்துறை தலைவர் மலர்விழி மங்கையர்க்கரசி நன்றி கூறினார்.

தமிழால் இணைவோம்
**இந்து தமிழ் திசை**

**05-08-2019** பக்கம்.எண்: 4

# தமிழ் பாடநூல்களில் இருந்து விலகிச் செல்லும் சமய நூல்கள்

● தியாகராசர் கல்லூரிச் செயலர் வருத்தம்

■ மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் திருவாசகம் பதிக விளக்கம் என்ற நூல் வெளியீட்டு விழா நடந்தது. மெய்கண்டார் அருள் நெறி மன்றத் தலைவர் முரு. கண்ணாத்தாள் வரவேற்றார். கல்லூரிச் செயலர் கருமுத்து. க.தியாகராசன் நூலை வெளியிட முதல்படியை பன்னிரு திருமுறை மன்றத் தலைவர் சுந்தரராமன் பெற்றார்.

விழாவில் கல்லூரிச் செயலர் பேசியதாவது:

மதுரை உட்பட தென் தமிழகத்தில் சித்தாந்தத் துறையில் தெளிவுள்ள நபர்களில் இந்த நூல் ஆசிரியர் ஆனந்தராசனும் ஒருவர். இவரைப் போன்ற நூலாசிரியர்கள் வளர்ந்தால் சைவம் தழைக்கும். சைவம் மக்களைப் பக்குவப்படுத்தும். மன அழுத்தம் கொண்ட மாணவர்களின் மனநிலையை ஒருநிலைப்படுத்த சைவ சித்தாந்தம் உதவும். நீதி, நெறிகளைப் பள்ளி, கல்லூரிகளில் கற்றுத்தர ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.

தமிழ் பாட நூல்களில் இருந்து திருவாசகம் போன்ற சமய நூல்கள் விலகிச் செல்கின்றன. பள்ளிகளில் 2 அல்லது 3 பாடங்களில் திருவாசகம் இடம் பெற அரசுக்கு மெய்கண்டார் அருள் நெறி மன்றம் கோரிக்கை மனு எழுத வேண்டும். இதனால் அடுத்த தலைமுறைக்கு சைவக் கருத்துகளைக் கொண்டு செல்லலாம்.

கல்லூரி விழாக்களில் சமயம் தொடர்பான கலை நிகழ்ச்சிகளும் குறைகின்றன. திருவாசகத்தை மாணவர்கள், மக்கள் எளிதில் தெரிந்து கொள்ள ' பயன்தரும் திருவாசகப் பாடல்கள்' தலைப்பில் நூல் வெளியிடவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நூலாசிரியர் ஆனந்தராசன் ஏற்புரையாற்றினார். மருத்துவர் ஏடி. தியாகராசன், பேராசிரியை ஞானப் பூங்கோதை, ஆயிர வைசிய கல்லூரி முதல்வர் அருணகிரி ஆகியோர் பேசினர். கல்லூரி முதல்வர் பாண்டிய ராஜா, முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் மாணிக்கம், கதிர்வேல் மற்றும் இணைப் பேராசிரியர் காந்திதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர். சசிகலா ஞானாபிசேகம் நன்றி கூறினார்.



▲ விழாவில் திருவாசகம் பதிக விளக்க நூலை கல்லூரிச் செயலர் க. தியாகராசன் வெளியிட, சுந்தரராமன் பெற்றுக்கொண்டார். உடன் நூலாசிரியர் ஆனந்தராசன், கண்ணாத்தாள்.

**தினமலர்**
**DINAMALAR**

**05-09-2019** க்கம்.எண்: 1

# Thiagarajar College

An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University
Re-Accredited with 'A' Grade by NAAC
Ranked 34th in NIRF 2019
**139 & 140 Kamarajar Salai, Teppakulam, Madurai-625 009, Tamil Nadu, India**
Website: www.tcarts.in I E-mail: principaltcarts@gmail.com
Phone: 0452 - 2311875

## WANTED

### ASSISTANT PROFESSORS (SELF FINANCED) IN THE FOLLOWING DEPARTMENTS

**1) English**
**2) Commerce**
**3) Computer Science**
**4) Mathematics**
**5) Chemistry**
**6) Psychology**
**7) Computer Application & Information Technology**

### QUALIFICATIONS

**55% in PG degree in the respective subject with Ph.D (or)**
**55% in PG degree in the respective subject with NET/SLET/SET**

Applications can be downloaded from the college website www.tcarts.in

Filled-in-Application should reach The Secretary, Thiagarajar College, Teppakulam, Madurai - 625 009 on or before 14.08.19. The candidates must clearly indicate and prominently specify the post for which they are applying on the envelope. Candidates will be informed to appear for a personal interview at their own cost.

| | | |
|---|---|---|
| Place: Madurai | Dr. D. Pandiaraja | Karumuttu K. Thiagarajan |
| Date: 05.08.19 | Principal | Secretary |

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**14-08-2019** பக்கம்.எண்: 2



▲ மாணவியுடன் நேர்காணல் நடத்தும் தமிழ்த்துறை தலைவர் மங்கையர்கரசி.

தியாகராசர் கல்லூரி சார்பில்

# அமெரிக்க மாணவிக்கு 'குறள் அவதானி' விருது

■ மதுரை

காரைக்குடியை பூர்விகமாகக் கொண்ட அமெரிக்க மருத்துவ மாணவி சிதா ராமசாமிக்கு தியாகராசர் கல்லூரி சார்பில் குறள் அவதானி விருது வழங்கப்பட்டது.

மதுரை தியாகராசர் கல்லூரியில் மருத்துவ மாணவி சிதா ராமசாமியுடன் நேர்காணல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து கல்லூரிச் செயலர் க.தியாகராசன் பேசுகையில், மாணவர்கள் தேர்வுக்காக படிக்காமல் வாழ்வியல் நூலான திருக்குறளை முழுவதுமாக பயின்று அதன் வழி நடக்க வேண்டும் என்றார். அமெரிக்காவில் மருத்துவம் பயிலும் மாணவி சிதா ராமசா மி பேசும்போது, ஆசிரியர் சிதா சுப்ரமணியன் என்னை ஊக்கப்படுத்துவார். பிளஸ் 2 முடிப்பதற்குள் அனைத்து குறளையும் முடித்தேன். இதில் வாழ்வியலுக்கு தேவையான விஷயங்கள் ஏராளமாக உள்ளன என்றார். முன்னதாக மாணவி சிதா ராமசாமியுடன் தமிழ்த்துறை தலைவர் மலர்விழி மங்கையர்கரசி நேர்காணலை நடத்தினார். முதல்வர் பாண்டியராஜா வாழ்த்தி பேசினார்.

அபிராமி ஒப்பிலாள் தியாகராசன் சிதா ராமசாமிக்கு சிறப்புச் செய்தார். உதவிப் பேராசிரியர் கற்பகம் வரவேற்றார். உமா மகேசுவரி நன்றி கூறினார். பேராசிரியர்கள் காந்தி துரை, சரவண ஜோதி உட்பட பலர் பங்கேற்றனர். தியாகராசர் கல்லூரி சார்பில், மாணவி சிதா ராமசாமிக்கு 'திருக்குறள் அவதானி பட்டம் வழங்கப்பட்டது.

**14-08-2019** பக்கம்.எண்: 4

# திருக்குறளை ஒப்புவிக்கும் அமெரிக்க வாழ் மருத்துவ மாணவிக்கு 'திருக்குறள் அவதானி' விருது



மதுரை தியாகராஜர் கலைக்கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏற்புரை நிகழ்த்தும், அமெரிக்க வாழ் மருத்துவ மாணவி சீதா ராமசாமி.

மதுரை, ஆக. 13: மதுரை தியாகராஜர் கல்லூரியில் 1330 திருக்குறள்களையும் மனப்பாடமாக ஒப்புவித்த அமெரிக்க வாழ் மருத்துவ மாணவிக்கு 'திருக்குறள் அவதானி' விருது செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் ஆறாவயல் பகுதியைச் சேர்ந்தவர்கள் லட்சுமணன் பாலாஜி, சாந்தி நாச்சம்மை தம்பதியினர். இவர்கள் மென் பொறியியல் பணி நிமித்தமாக அமெரிக்காவின் டல்லாஸ் நகரில் வசிக்கின்றனர். இவர்களது மகள் சீதா ராமசாமி(20) அமெரிக்காவில் மருத்துவக் கல்வி பயின்று வருகிறார். இவர் திருக்குறளில் உள்ள 1330 குறள்களையும் மனப்பாடமாக ஒப்புவித்து அமெரிக்காவில் பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். இந்நிலையில் அவருக்கு விருது வழங்கும் விழா மதுரை தியாகராஜர் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. தமிழ்த்துறை சார்பில் நடைபெற்ற விழாவுக்கு கல்லூரிச் செயலர் கருமுத்து கூதியாகராஜன் தலைமை வகித்து, சீதா ராமசாமிக்கு 'திருக்குறள் அவதானி' விருது வழங்கிப் பேசினார்.

ஏற்புரையில் சீதா ராமசாமி பேசியது: இச் சாதனைக்காக கலிபோர்னியா மாகாணத்தில் நடைபெற்ற விழாவில் 'குறள் அரசி' விருதும்,, தமிழ் மரபு அறக்கட்டளை சார்பில் 'திருக்குறள் விருதும்' அளிக்கப்பட்டது. தமிழகத்தில் ஆறாவயலில் நடைபெற்ற விழாவில் உயர்நீதி மன்ற நீதிபதி சொக்கலிங்கம் 'குறள் செல்வி' என்ற விருதை அளித்தார். மேலும், அமெரிக்கத் தமிழ்ச் சங்கம் நடத்தும் வானொலியில் 'தமிழா, தமிழா' நிகழ்ச்சியிலும் பங்கேற்றுள்ளேன் என்றார்.

நிகழ்ச்சியில் சீதா ராமசாமியை, அபிராமி ஒப்பிலான் தியாகராஜன் கௌரவித்தார். கல்லூரி முதல்வர் பாண்டியராஜன் வாழ்த்திப் பேசினார். முன்னதாக பேராசிரியை கற்பகம் வரவேற்றார். தமிழ்த்துறை தலைவர் மலர்விழி மங்கையர்க்கரசி, சீதா ராமசாமியை நேர்காணல் செய்தார். விழாவில் கல்லூரியின் அனைத்து துறைகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

**21-08-2019** க்கம்.எண்: 3



மதுரை காமராஜ் பல்கலையில் நடந்த பாட்மின்டன் போட்டியில் வெற்றி பெற்ற அமெரிக்கன் கல்லூரி அணியினருக்கு துணைவேந்தர் கிருஷ்ணன் கோப்பை வழங்கினார்.

## மாநில கைப்பந்து போட்டிகள்

**மதுரை, ஆக. 21 -** மதுரை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையிலான மின்னொளி கைப்பந்து போட்டிகள் நடக்கின்றன. மதுரை காமராஜ் பல்கலை துணை வேந்தர் கிருஷ்ணன் போட்டிகளை துவக்கி வைத்தார்.

முதல் லீக் போட்டியில் பொள்ளாச்சி சரஸ்வதி தியாகராஜா கல்லூரி அணி, சென்னை வைஷ்ணவா கல்லூரி அணியை 23 –25, 25 –19, 15–25, 25–21, 15–10 புள்ளிகள் பெற்று வென்றது.

இரண்டாவது லீக் போட்டியில் எஸ்.ஆர்.எம்., பல்கலை அணி, சென்னை சத்யபாமா பல்கலை அணியை 25–19, 25–22, 25–17 புள்ளிகளில் வென்றது.

மூன்றாவது லீக் போட்டியில் சென்னை வைஷ்ணவா கல்லூரி அணி, தூத்துக்குடி வ.உ.சி., கல்லூரி அணியை 25–21, 25–23,25–16 புள்ளிகளில் வென்றது. நான்காவது லீக் போட்டியில் சென்னை சத்யபாமா பல்கலை அணி, திண்டுக்கல் ஜி.டி.என். கல்லூரி அணியை 25–21, 25–23, 25–18 புள்ளிகளில் வென்றது.

துவக்க விழாவில் கல்லூரி தலைவர் கரிக்கோல்ராஜ், முதல்வர் (பொறுப்பு) ஜவஹர், துணை முதல்வர் பிரேமலதா, சுயநிதிப் பிரிவு இயக்குனர் ஸ்ரீதர், முன்னாள் மாணவர் ராஜகணேஷ்ராம் பங்கேற்றனர். உடற்கல்வி இயக்குனர் குமார் ஒருங்கிணைத்தார்.

தமிழால் இணைவோம்

இந்து தமிழ் திசை

பக் **21-08-2019** கம்.எண்: 4

# கொசு ஒழிப்பு தினவிழா




▲ மாணவிகளுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கிய தியாகராசர் கல்லூரி முதல்வர் பாண்டியராஜா.

**மதுரை**

மதுரை தியாகராசர் கல்லூரியில் என்எஸ்எஸ் மற்றும் நேட்சர் கிளப் சார்பில் உலக கொசு ஒழிப்பு தின விழா நடந்தது.இதையொட்டி நடந்த பேரணியை கல்லூரி முதல்வர் பாண்டியராஜா தொடங்கி வைத்துப் பேசுகையில், "மழைக் காலத்தில் கொசு உற்பத்தி நகரின் முக்கியப் பிரச்சினையாக மாறிவிட்டது. நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள நில வேம்பு கசாயம் குடிக்க வேண்டும்," என்றார். ஏற்பாடுகளை என்எஸ்எஸ் திட்ட அலுவலர் பேராசிரியர் அருணா ராமச்சந்திரன் செய்திருந்தார். கோகிலா சித்த மருத்துவமனை சார்பில் நிலவேம்புக் கசாயம் வழங்கப்பட்டது.


தமிழால் இணைவோம்

இந்து தமிழ் திசை

**21-08-2019** பக்கம்.எண்: 4

# தியாகராசர் கல்லூரி பேராசிரியருக்கு பன்னாட்டு விருது

■ மதுரை

உலக மருத்துவக் குழுமம், பன்னாட்டு ஆராய்ச்சிக் குழுமமும் இணைந்து ஆண்டுதோறும் சிறந்த கட்டுரையாளர்களுக்கு 'ரூலா அவார்டு' வழங்குகிறது. இந்த ஆண்டுக்கான விருது பட்டியலில் தமிழகத்தில் இருந்து மதுரை தியாகராசர் கலை, அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் சி. சரவணஜோதி, தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறை பேராசிரியர் சௌ. வீரலட்சுமி ஆகியோர் இடம் பெற்றனர்.

சிறந்த தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளுக்காக இவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். திருச்சியில் நடந்த விழாவில் இவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

தமிழால் இணைவோம்

**இந்து தமிழ் திசை**

**21-08-2019** பக்கம்.எண்: 4



▲ அமெரிக்கன் கல்லூரி அணிக்கு பரிசுக் கோப்பையை வழங்கிய துணைவேந்தர் எம். கிருஷ்ணன்.

# பேட்மிண்டன் போட்டியில் அமெரிக்கன் கல்லூரி முதலிடம்

மதுரை

காமராசர் பல்கலைக்கழக உள் விளையாட்டு அரங்கில் நடந்த கல்லூரிகளுக்கான பேட்மிண்டன் போட்டியில் அமெரிக்கன் கல்லூரி முதலிடம் பிடித்தது.

மேலும், திண்டுக்கல் ஜிடிஎன் கல்லூரி இரண்டாவது இடமும், விருதுநகர் ராஜுஸ் கல்லூரி மூன்றாது இடமும் பெற்றன. மதுரை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி நான்காவது இடத்தைப் பிடித்தது.

முதலிடம் பெற்ற அமெரிக்கன் கல்லூரி அணிக்கு துணைவேந்தர் எம். கிருஷ்ணன் கோப்பையை வழங்கிப் பாராட்டினார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர் ஜெகவீரபாண்டியன், பேராசிரியர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**26-08-2019** பக்கம்.எண்: **4**

# தியாகராசர் கல்லூரியில் கலை இலக்கியப் போட்டி

**மதுரை**

மதுரை தியாகராசர் கல்லூரியில் ராமலிங்கர் பணி மன்றம் சார்பில், 54-வது கலை இலக்கியப் போட்டி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் து.பண்டியராஜா தலைமை வகித்தார். தமிழ்துறைத் தலைவர் மலர்விழி மங்கையர்கரசி வரவேற்றார். புலவர் வேலாயுதம், ராமலிங்க பணிமன்றப் பொறுப்பாளர் பாலு ஆகியோர் பேசினர். தமிழ்த்துறை பேராசிரியர் சி. சரவணஜோதி நன்றி கூறினார்.

இதையொட்டி கல்லூரியில் நடந்த பேச்சுப் போட்டியில் முதல் பரிசாக ரூ. 5 ஆயிரம், பள்ளியளவில் நடந்த பேச்சு போட்டியில் முதல் பரிசு ரூ. 6 ஆயிரமும், இசைப் போட்டியில் முதல் பரிசு ரூ. 5 ஆயிரம், மனனப் போட்டி முதல் பரிசு ரூ.5 ஆயிரமும் வழங்கப்பட்டது. இப் போட்டிகளில் 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**27-10-2019** பக்கம்.எண்: **9**



மண்டல கோ-கோ போட்டி:

# அமெரிக்கன் கல்லூரி சாம்பியன்

மேலூர், ஆக.27-
மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் மண்டல அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான கோ-கோ போட்டி மேலூர் அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மேலூர் அரசு கலைக்கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி, மதுரை சுப்புலட்சுமி லட்சுமிபதி கல்லூரி, யாதவா கல்லூரி, மதுரை தியாகராஜா கல்லூரி உள்பட 10-க்கும் மேற்பட்ட அணிகள் கலந்துகொண்டன. இதில் அரைஇறுதி போட்டிக்கு மேலூர் அரசு கலைக்கல்லூரி, தியாகராஜா கல்லூரி, அமெரிக்கன் கல்லூரி, சுப்புலட்சுமி லட்சுமிபதி கல்லூரி ஆகிய 4 அணிகள் தகுதிபெற்றன. முதல் அரைஇறுதி போட்டியில் மேலூர் அரசு கலைக்கல்லூரி அணி, தியாகராஜா கல்லூரியை வென்றது. 2-வது அரைஇறுதி போட்டியில் அமெரிக்கன் கல்லூரி, சுப்புலட்சுமி லட்சுமிபதி கல்லூரியை வென்றது.

இதையடுத்து இறுதி போட்டி நடைபெற்றது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அமெரிக்கன் கல்லூரி அணி, மேலூர் அரசு கலைக்கல்லூரி அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் மேலூர் அரசு கலைக்கல்லூரி முதல்வர்(பொறுப்பு) கணேஷ்வரி கலந்துகொண்டு போட்டிகளில் வென்ற அணிகளுக்கு பரிசு வழங்கினார். இதில் கல்லூரி உடற்கல்வி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தினமலர்
DINAMALAR
28-08-2019 க்கம்.எண்: 3

## கொசு ஒழிப்பு தினம்

மதுரை தியாகராஜர் கல்லூரியில் என்.எஸ்.எஸ்., சார்பில் உலக கொசு ஒழிப்பு தின நிகழ்ச்சி முதல்வர் பாண்டியராஜா தலைமையில் நடந்தது. மழை காலங்களில் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுப்பது குறித்து மாணவர்கள் உறுதி மொழி ஏற்றனர். கோகிலா சித்த மருத்துவமனை சார்பில் நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது. பேராசிரியை அருணா ஒருங்கிணைத்தார்.

தினமலர்
DINAMALAR
30-08-2019 பக்கம்.எண்: 5

# மாணவர் ஆராய்ச்சி நிதி அதிகரிப்பு

மதுரை, ஆக.30 –

மதுரை தியாகராஜர் கல்லூரியில் மூலக்கூறு மற்றும் உயிரி தகவல் தொழில்நுட்பம் என்ற தலைப்பிலான மாநில பயிலரங்கு நடந்தது.

மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கவுன்சில் உறுப்பினர் சீனிவாசன் துவக்கி வைத்து பேசியதாவது:

கவுன்சில் சார்பில் பல்கலை, கல்லூரி ஆராய்ச்சிகள் ஊக்கப்படுத்தப்பட்டு

## பயிலரங்கில் தகவல்

வருகின்றன. கல்லூரி அளவிலான 200 திட்டங்களுக்கு ரூ.2.50 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களில் ஆய்வில் ஈடுபடும் 40 வயதுக்கு கீழ் உள்ள பேராசிரியர்களுக்கும் நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

முதல்வர் பாண்டியராஜா தலைமை வகித்தார். டில்லி விஞ்ஞானி ரவீந்தர் கவுர், திருச்சி பாரதிதாசன் பல்கலை பேராசிரியர் பார்த்தசாரதி, இயக்குனர் ராஜசேகர் பேசினர்.

மைக்ரோபயாலஜி துறை தலைவர் முருகப்பன் ஒருங்கிணைத்தார். 800க்கும் மேற்பட்ட மாணவர் பங்கேற்றனர். ஆக.,31 வரை பயிலரங்கு நடக்கிறது.

THE NEW INDIAN EXPRESS

**31-08-2019** **Pg No: 2**

# Pursue research in science to solve issues: Scholar

EXPRESS NEWS SERVICE
@Madurai

THE Department of Zoology and Microbiology of Thiagarajar College organised a National Workshop on 'Molecular and Computational Biology Techniques' sponsored by Tamil Nadu State Council for Science and Technology (TNSCST).

TNSCST Member Secretary R Srinivasan, in his inaugural address, encouraged the students to pursue research in Science and Technology front to find solutions for the problems that affect the living beings and environment.

He also elaborated the various schemes funded by TNSCST in support of student research. "Excel in Science and bring glory to our country by emulating great scientists like Sir C V Raman, Homi Jehangir Bhabha, Vikram Sarabhai and our beloved former president A P J Abdul Kalam," he told students.



He also said that TNSCST acts as a focal point for formulating, planning, coordinating, and promoting Science and Technology activities, and helps in preparing State Science and Technology plans, facilitating technological interventions, disseminating Innovation technology information and injecting scientific temper.

Ravinder Gour, Scientist from Department of Science and Technology, New Delhi, spoke on the importance of student participation in basic science researches. S Parthasarathy, Professor of Bioinformatics, Bharathidasan University, Tiruchy, emphasised the job opportunities.

> TNSCST acts as a focal point for formulating, planning, coordinating, and promoting Science and Technology activities, and helps in preparing State Science and Technology plans
>
> R Srinivasan, TNSCST Member Secretary

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
**08-09-2019** பக்கம்.எண்: 4



▲ சேலத்தில் நடந்த சர்வதேச அளவிலான ஜூனியர்-2 பிரிவு குங்ஃபூ போட்டியில் இரண்டாம் பரிசாக வெள்ளி மெடல் பெற்ற மதுரை தியாகராசர் கல்லூரி ஆங்கிலத் துறை மாணவர் கு.சி.சூர்யராஜாவை முதல்வர் டி.பாண்டியராஜன் பாராட்டினார். உடன், உடற்கல்வி இயக்குநர் ஆர்.செல்வக்குமார்.

THE HINDU
10-09-2019 Pg No: 2

## English Literary Association

English Literary Association was inaugurated at Thiagarajar College in which Associate Professor Lawrence spoke on 'Thinking through literature.' Principal D. Pandiaraja quoted Tirukkural in his speech and HoD Subathra Devi spoke on drawing wisdom from literature. Assistant Professor Arun coordinated the event.

Commerce Association and various clubs were inaugurated at the college. Mohammed Suhail, general secretary of Commerce Clubs, welcomed the gathering. HOD of Commerce I. Nagarajan, spoke. Chief guest R. Sridharan, a Charted Accountant, inaugurated the association, six commerce clubs and presented the charter of the clubs to the coordinators.